# முரசொலி

வார இதழ்

ஆசிரியர்: மு. கருணாநிதி..

2 அணா

முரசு 2 | சென்னை | 10—6—55 | வெள்ளி | ஒலி 11


# "நெற்றியில் பிறந்தவர்கள்" - - - - நெற்றிக்கண் திறக்கிறார்கள்!

இங்கு வெளியிடப் பட்டிருப்பது போன்ற சித்திரமொன்று சென்ற கிழமை சென்னை அரசாங்கத்தின் சிந்தை கலக்கியிருக்கிறது. அக்ரகாரத்திலே புயலொன்றைக் கிளப்பி, அந்தப் புயல் மூலம் எழுந்த புழுதி இன்று சென்னையைச் சூழ்ந்து கொண்டிருக்கிறது.

உச்சிக் குடுமியும்-உப்பிய வயிறும்-உருவிவிட. மார்பின் குறுக்கே பாயும் பூணூலும் கொண்ட உருவமொன்று, ஒட்டிய வயிறு படைத்த இந்த நாட்டுப் பழங்குடி மகனொருவனை 'தொடாதே!' என்று துரத்தியடிக்கிறது. அரசினரால் சட்ட விரோதமாக்கப் பட்டிருக்கும் தீண்டாமையை அனுஷ்டித்த குற்றத்திற்காக அந்த 'உயர் ஜாதிக்காரர்' சிறைச் சாலையில் தள்ளப்படுகிறார்.




இதுதான் சென்னை அரசினர் சுவரொட்டியாகத் தயாரித்திருக்கும் படத்தின் கருத்து. அந்தப் படத்திலே உள்ள உயர் ஜாதிக்காரனை — ஜாதி இந்துவை — பார்ப்பனரென்று எண்ணிக் கொண்டு படமெடுத்து ஆடுகிறது பிராமணீயப் பாம்பு!

வார்த்தைக்கு வார்த்தை விஷத்தைத் தடவி, 'இந்து' பத்திரிகை தலையங்கமே தீட்டியிருக்கிறது! சனாதனத் தளபதியிடமிருந்து சமிக்ஞை கிடைத்த பிறகு, சந்து பொந்துகளிலே இருந்த 'சாணக்கியக் குஞ்சு'களெல்லாம் சல்லடம் கட்டிக் கொண்டு களத்திலே குதித்திருக்கின்றனர்.

31—5—55 அன்று திருச்சியிலே புல்லேந்திகள் கூடி வாளேந்தும் வீரனைப்போல கர்ஜனைக் கிளப்பியிருக்கிறார்கள்.

சென்னை அரசினர் வெளியிட்டிருக்கும் சுவரொட்டிப் படம் பார்ப்பன ஜாதியினரை புண்படுத்துவதாக இருக்கிறதாம — இப்படிப் பேசியிருக்கிறார்கள், பிராமணப் புலிகள்!




தீண்டாமை அனுஷ்டிப்பது தவறு என்பதை பாமர மக்களுக்கு எடுத்துக்காட்ட, டெலலி பாராளுமன்றத்தில் நிறைவேறிய சட்டத்தை விளக்குவதற்கான பிரச்சாரம் செய்ய வேண்டிய அவசியம் சென்னை அசினருக்கு ஏற்பட்டது. சமாதானத்தைக் குறிப்பதற்கு வெண்புறாவைத் தேர்ந்தெடுத்ததைப் போல-இயந்திரத்தைக் குறிப்பதற்கு ஆலையின் சக்கரத்தைக் காட்டுவதைப் போல — விஷத்தைக் காட்டுவதற்கு பாம்பின் படத்தைப் போட்டுக் காட்டுவதைப் போல— உயர் ஜாதிக்காரன் ஒருவனைக் குறிப்பிட ஒரு பார்ப்பனனை வரைந்திருக்கிறார்கள்.

இதைத் தவறென்று கூறுகிறார்கள், தர்ப்பாசுரர்கள்! உறுமுகிறார்கள், உச்சிக்குடுமி வைத்தோர்!

எப்படித் தவறாக முடியும்? தர்மத்தைக் குறிப்பதற்காக 'தர்ம தேவன்' என்று எல்லோராலும் புகழப்படும் அசோகனின சக்கரத்தை இந்திய அரசினர் கொடியிலே பொறித்துக் கொள்ளவில்லையா? செழுமையைக் குறிக்க பச்சை வர்ணத்தையும், சமாதானத்தைச் சுட்டிக்காட்ட வெள்ளை நிறத்தையும் உபயோகிப்பதைப் போலத்தானே உயர் ஜாதிக்காரனைக் குறிப்பிட ஒரு பார்ப்பன உருவத்தை வரைந்திருக்கிறார்கள். இது எப்படித் தவறாக முடியும்?

பார்ப்பனர்கள் தாங்கள் உயர் ஜாதிக்காரர்கள் அல்ல என்று ஒப்புகிறார்களா?

அப்படியானால், 'தாங்கள் பிரம்மாவின் நெற்றியிலிருந்து

தொடர்ச்சி 4-ம் பக்கம்

நினைவின் சாம்பல் - (சிறுகதை-பக்கம் 5)

# ஆவடிக் குழந்தை அலறிச் சாகிறது!

**அன்புள்ள குமார்,**

"சருத்துக் காகமாகிவிட்ட காங்கிரசை ஆவடியிலே நெருப்பால் குளிப்பாட்டி விட்டோம்; குணக்குன்ருக மாற்றி விட்டோம். இனி கட்சியினுள்ளே குறைகள் இல்லை; குமறங்கள் இல்லை!"—என்று காது செவிடுபட சங்கு ஊதினார்கள் அல்லவா, தேசிய வீரர்கள்? அங்கு நிறைவேறிய தீர்மானங்களைப் பத்திரிகையிலே படித்த உன் போன்றவர்கள், அங்கே எழுந்த கூக்குரலின் வேகத்தை உணர்ந்த மாத்திரத்தில், அவைகளை உண்மையென்றே நம்பியிருப்பார்கள்.

காங்கிரசின் கறையைத் துடைக்க ஒரு கமிட்டியாம்! ஒழுங்கு மீறுவோர்மீது கண்டிப்பான நடவடிக்கையாம்! -இப்படியெல்லாம் புதுப்புது புல் வாணங்கள் பறந்தன!

சென்ற மாதம் பெர்ஹாம்பூரிலே கூடியதே அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி—அதில் கூட பழைய 'ஆவடிக் கிளி'யையே பேச வைத்திருக்கிருர்கள்.

இரண்டு மணி நேர காரசாரமான விவாதத்திற்குப்பின்னர், காங்கிரசின் 'தூய்மைத் தீர்மானம்' நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

"ஸ்தாபனத் தூய்மையை நிலை நாட்ட வேண்டுமென்று சாதாரண அங்கத்தினர்களைக் கேட்டுக் கொள்வதற்கு முன்னர், மந்திரிகளும், சட்டசபை மெம்பர்களும், உயர் பதவி வகிக்கும் தலைவர்களும் அங்கத்தினர்களுக்கு வழி காட்ட வேண்டும்"—என்று 'இதோபதேசம்' செய்தாராம், மேல் வங்கத்தைச் சேர்ந்த அப்துல் சத்தார்!

செல்வப் பிள்ளையை—சென்ற கிழமை ஆந்திர மாநிலத்து முதல்வர் கோபால ரெட்டியார் குரல் வளையை நெறித்திருக்கிருர்.

இதோ, அந்தக் குழந்தை கண்ணீர் விட்டு, குய்யோ முறையோ—என்று கதறுவதைப் பார்!

உனக்குத் தெரியும், தெலுங்குச் சீமையிலே பொதுத் தேர்தல் நடந்த காலை கோபாலர் தான் காங்கிரஸ் காரியதரிசியாக பதவி வகித்தார்—என்ற செய்தி! பெரும் பான்மையான மாநிலங்களைப் பொறுத்தவரை 'காங்கிரஸ் காரியதரிசி' என்ருலே அந்தப் பிராந்தியத்தின்

இப்போது அவர் ஒரு தொகுதியை ராஜிநாமா செய்துவிட்ட காரணத்தால், தேர்தல் முடிந்த ஓரிரு மாதங்களுக்குள்ளாகவே மீண்டுமொரு உபதேர்தல் நடைபெற இருக்கிறது!

கோபாலரின் 'தொடை நடுங்கித் தன்மை' காரணமாக பொது மக்களின் வரிப்பணம் எங்கெந்த விதங்களில் விரயமாகிறது—என்பதை நீயே யோசித்துப்பார், குமார்!

ஆவடியிலே தூய்மைத் தீர்மானம் கண்டவர்கள் இந்த உபதேர்தலுக்கு யாரை நிறுத்தப் போகிருர்கள் தெரியுமா? குணமென்னும் குன்றேறி

முறையே 70; 75; 85—வயதுள்ள மூன்று முதுபெரும் கிழவர்கள் தூக்கு தண்டனை பெற்றிருக்க வேண்டிய பரிதாபகரமான நிலைமை உருவாகியிருக்குமாம்.

உயர் நீதி மன்றத்தினரால் இந்த வகையில் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டிருக்கும் ஒருவர்தான், இப்போது கோபாலர் கருணையால் மக்கள் தொண்டன் வேடம் தாங்கி சட்டசபை நுழையப் போகிருர்.

பொய் சாட்சியம் புனைவதிலே கைதேர்ந்தவர், காங்கிரசின் போர்வையிலே 'கனம்' ஆகப் போகிருர்!

நரை விழுந்த மூன்று வயோதிகப் பழங்களை — அப்பாவிக் கிழவர்களை — இன்னும் சில ஆண்டுகளில் அவர்களாகவே சாவதற்கு இருக்கும் விருத்தாப்பிய வயதினரை—சீக்கிரத்தில்—குறுக்கு வழியில் சுடுகாட்டுக்கு அனுப்பி வைக்கத் தீர்மானித்த கொடியவர் ஒருவர் கோலோச்சும் அவையிலே நுழைய இருக்கிருர்—அதுவும், காங்கிரசின் போர்வையிலே!

நினைத்தாலே நெஞ்சு கொதிக்கிறது, குமார்! இன்றைய காங்கிரஸ் கொள்கைக் குமரர்களோடு அல்ல; கிரிமினல் கைதிகளோடு கொஞ்சி விளையாடுகிறது! இந்த நிலையிலேதான்—உண்மையை உலகுக்கு மறைக்க—ஆவடியிலும், பெர்காம்பூரிலும் தூய்மைத் தீர்மானம் நிறைவேற்றுகிருர்கள்!

ஆந்திராவிலே நல்ல பாம்புக்கு பால் வார்க்கிருர்கள்—அதே நேரத்தில் பெர்காம்பூரில் பாம்பு பிடிக்கும் தீமானம் போடுகிருர்கள்!

இதுதான் குமார்; இன்றைய காங்கிரசின் 'அர்த்தநாரீஸ்வர அவதாரம்'!

அத்தகைய காங்கிரசின் மாஜி-செயலாளர்தான் இப்போது ரஷ்யா போயிருக்கிருர்!



இட்லர் என்றுதானேபொருள்! இங்கு ஏதோ கக்கன் காமராசரின் கண் அசைவைக் கண்டே கதி கலங்கிப் போகிருர்—அவருடைய புருவம் உயர்ந்தால் பொசுங்கி விடுவோமோ என்று நடுங்கிச் சாகிருர்! ஆனால் கோபாலர் அப்படியல்ல! பிரகாசத்துக்குக் 'காஷாயம்' கொடுக்க அப்போது சதித் திட்டமொன்று உருவாகிக் கொண்டிருந்ததால், கோபாலரெட்டியின் எதேச்சாதிகாரப் போக்கிற்கு

நிற்கும் சத்திய சீலர் ஒருவரையா?

நேர்மையின் சிகரம்; நீதியின் சாகரம்—என்று புகழத்தக்க பொதுமக்கள் தொண்டனையா?

அல்ல; அல்ல! உயர்நீதி மன்றத்தினரால் பொய் சாட்சி சொல்வதில் வல்லவர்—என்று இழித்துரைக்கப்பட்ட கடைக் குணத்தார் ஒருவரை கோபாலர் பொதுமக்கள் தூதுவனுக சட்டசபைக்கு அனுப்பி

அன்புள்ள,
**பொன்முடி**

# ஆந்திர அரசில் ஒரு ஆபாசக் காட்சி!

தீர்மானம் ஏட்டளவில் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டிருக்கிறது—ஆனால், செயல் வடிவு கொடுக்கப் பட்டதா? தேசிய வீரர்கள் காங்கிரசின் தூய்மைத் தீர்மானம் பற்றி சிந்தனை செய்தனரா?

இல்லை—வழக்கம் போலவே எல்லாத் தீர்மானங்களுக்கும் நேர்ந்த கதிதான் இதற்கும் கிடைத்திருக்கிறது. ஆவடியிலே பிறந்த 'தூய்மைத் திட்டக்' குழந்தையை — பெர்ஹாம்பூரிலே பெயர் சூட்டப்பட்ட அந்த

'மேலிடத்து' ஆசீர்வாதம் கூட இருந்தது!

எனவேதான் அவர் இரண்டு தொகுதிகளிலே தன்னுடைய அபேட்சா பத்திரங்களைத் தாக்கல் செய்திருந்தார், ஆயிரக் கணக்கான 'புள்ளி'கள் அந்த இடத்திலே போட்டியிட விரும்புகிருர்கள் என்பதையும் அலட்சியம் செய்து விட்டு! நமதருமைக் கம்யூனிஸ்ட் தோழர்கள் செய்த தவறு காரணமாக கோபாலர் இரு தொகுதிகளிலும் வெற்றி பெற்று விட்டார்!

வைக்க உத்தேசித்திருக்கிருர்!

இதோ விபரம் தருகிறேன். இந்த உபதேர்தலுக்கு காங்கிரசின் சார்பாக போட்டியிடப் போகும் வி. கோதண்டராம ரெட்டி என்பவர் (இவர் கோபால ரெட்டிக்கு மிகவும் வேண்டியவர்) ஒரு கொலை வழக்கில் பிராசிக்கியூஷன் சாட்சியாக நீதிமன்றத்தின் முன்னே நிறுத்தப்பட்டாராம். அவர் கூறிய பொய் சாட்சிகள் உண்மையென்று எடுத்துக் கொள்ளப் பட்டிருந்தால்

**'முரசொலி'**

**சந்தா விபரம்**

**உள்நாடு-இலங்கை**

| | |
|---|---|
| ஆண்டு சந்தா | 6-0-0 |
| 6-மாத சந்தா | 3-8-0 |

**வெளிநாடு**

| | |
|---|---|
| ஆண்டு சந்தா | 7-0-0 |
| ஆறுமாத சந்தா | 4-0-0 |

மூன்று மாத சந்தா கிடையாது.

# தலையங்கம்

**காதலிலே கவிதையிலே களம் போதும் பேச்சு;**
**கணவனுக்கும் மனைவிக்கும் திராவிடமே மூச்சு!**

சென்னை 10—6—55 வெள்ளி

## ‘ஜனநாயக லீலா’

அரசியல் துறவு பூண்டு பூதான இயக்கத்திற்காக ‘ஆயுள்தானம்’ செய்திருக்கும் ஜெயப்பிரகாஷ் நாராயண் சில நாட்களுக்கு முன்னர் லட்சுமணபுரியில் பேசும்போது குறிப்பிட்டார்; ‘சர்வாதிகார நாடுகளைச் சேர்ந்த நிபுணர்களை அழைத்து, நேரு சர்க்கார் யோசனை கேட்பதாக’! மேலும் அவர், “இரண்டாவது 5-ஆண்டுத் திட்டம் தயாரிக்கும் நிபுணர் குழுவில் பெரும்பான்மையோர் ரஷ்யாவைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள்” என்றும் கூறி, அவர்களுடைய பெயர்களையும் சுட்டிக் காட்டினார்.

“ஜனநாயக நாட்டில் உருவாகும் திட்டத்தை சர்வாதிகார நாட்டைச் சார்ந்தவர்கள் தயார் செய்தால் அதில் சர்வாதிகார வாடை தானே வீசும்?”-என்றும் அந்தத் ‘துறவி’யார் விளக்கம் கேட்டார்.

பாண்டுங் பண்டிதரின் திட்டத்தில் யதேச்சாதிகாரமென்னும் சாக்கடை நாற்றம் வீசுமா; அன்றி மக்கள் நாயக நறுமணம் கமழுமா என்பது பற்றி நாம் இப்போது விவாதிக்க வரவில்லை. ஆனால், ஜனநாயகக் கொடியை உயர்த்திப் பிடித்துக் கொண்டிருப்பதாக உற்சாகப் பண்பாடும் அலகாபாத் வீரரின் செயல்களிலே, துளியளவும் குடியாட்சிக் கொள்கையில்லை-என்பதை மட்டும் நம்மால் குன்றின்மேல் நின்று கொக்கரித்துக் காட்ட முடியும்.

“டெய்லி எக்ஸ்பிரஸ்” என்று ஒரு நாள் ஏடு; இங்கிலாந்திலே செல்வாக்கு பெற்ற பத்திரிகைகளில் ஒன்று. கன்சர்வேட்டிவ் கட்சியில் சார்பு கொண்டது. மே மாதம் 30-ந்தேதி யன்று அதிலே வந்திருக்கும் கட்டுரையின் ஒரு பகுதியைக் கீழே தருகிறோம்:

“இந்தியாவின் முதல் மந்திரி நேரு, ஜனநாயகம் என்பதற்கு என்ன பொருள் கொண்டிருக்கிறார் என்பது யாருக்காவது தெரிய வேண்டுமானால், அவர்கள் காஷ்மீரத்து ஷேக் அப்துல்லாவைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். ஆனால், தற்சமயம் ஷேக் அப்துல்லாவை யாரும் நெருங்க முடியாது. காரணம், அவர் சிறைச்சாலையிலிருக்கிறார். ஷேக் காஷ்மீரத்துக்கு விடுதலை கோரினார். ஆனால் அதற்கு நேருவும் உடந்தையாக இருப்பார் என்று அவர் தப்புக் கணக்கு போட்டு விட்டார். உண்மையில் பாகிஸ்தானுக்கு எதிராக அப்துல்லாவை பயன் படுத்த வேண்டுமென்பதுதான் நேருவின் ஆசை.”

“ ... அப்துல்லாவின் விடுதலை வேகம் வெளிப்பட்டதும் அவர் மர்மமாக சிறைக்குத் தள்ளப்பட்டார். அவரது இடத்தில் இந்தியாவுக்கு தலையாட்டும் ஒருவர் அமர்த்தப்பட்டார்.”

—இப்படியெல்லாம் அந்த ஆங்கில ஏடு நேருவின் ஜனநாயகக் கொள்கையை விமர்சனம் செய்திருக்கிறது. ஆசியாவின் அரசியல் ஆசான்-சீனத்திலே சிறையிருந்த அமெரிக்க விமானிகளுக்கு விடுதலை பெற்றுத் தந்த வெற்றிச் செல்வன்--21 மாதங்களாக ஷேக் அப்துல்லா என்னும் சிங்கத்தைக் கூட்டிலே தள்ளி பூட்டியிருக்கிறார். அவர் விரும்பியிருந்தால் எப்போதோ அந்த வீரனுக்கு விடுதலை வழங்கியிருக்கலாம்!

ஏறக்குறைய இரண்டு ஆண்டுகள் முடியப் போகின்றன. காராக்கிரகத்திலே வாடும் அப்துல்லாவைப்பற்றி கண்துடைப்புக்காவது ஒரு விசாரணை நடத்தியதாகத் தெரியவில்லை!

பீக்கிங் நகரத்துக்கு ஒரு கிருஷ்ணமேனனைத் தூதனுப்பியவர், ஸ்ரீநகருக்கு ஒரு செய்தி அனுப்பி ‘சிங்க’த்தை விடுவிக்க யாதொரு நடவடிக்கையும் எடுக்கக் காணோம்!

அரிஸ்டாட்டில் போல அழகாக ஜனநாயகத்துக்கு விளக்கம் தருவாராம்! மேடை கிடைத்து விட்டால் போதும்—குடியாட்சியின் குளுமை பற்றி கேட்போர் மயங்குமளவுக்கு வார்த்தை ஓடையின் கரைகளை உடைத்து விடுவாராம்! அத்தகைய பெரியவர்தான் விசாரணையின்றி விடுதலை விருத்தம் பாடிய வீரனொருவனை காராகிரகத்திலே காவல் வைத்திருப்பாராம்! அவரைத்தான கதராடை தரித்த கனவான்கள் ‘ஜனநாயகத் தடாகத்திலே தேன் சிந்திப் பூத்திருக்கும் தாமரை’ என்று ‘போற்றிப்’ பாடுவார்களாம்!

—இது நேருவின் ‘ஜனநாயக லீலா’ நாடகத்தில் ஒரு கட்டம்! இதோ, அதே நாடகத்தின் சுவையான [illegible]தியொன்றைப் பார்ப்போம்!

பஞ்சாபிலே சீக்கிய சிம்மங்கள் [illegible]ம் கர்ஜனை சென்ற சில செவிடு படுத்துகிறது. குருநானக்கைப்போல கொள்கைத் தெளிவும், குரு கோவிந்த சிங்கைப் போன்ற வீர உணர்வும் கொண்ட ஒப்பற்ற தலைவராம் மாஸ்டர் தாராசிங் இன்று சிறைப் பறவையாக கூட்டிலே அடைபட்டிருக்கிறார்.

பஞ்சாப் மொழி வழி மாகாணப் பிரிவினை குறித்து, உரிமைக் கொடி உயர்த்தியிருக்கும் அகாலி தளத்தவரை ஆயிரக் கணக்கிலே அரசாங்கம் சிறை வைத்திருக்கிறது. ஜூன் 4-ம் தேதி வரை 2066 தொண்டர்கள் கைதாகியுள்ளனர். ஜலந்தரிலிருந்து வெளிவரும் பத்திரிகை கைதானோர் தொகை 3 6 0-என்று கணக்கு காட்டுகிறது.

தனி மாநிலம் கேட்டு வீரர்கள் அணி அணியாகத் திரள்கின்றனர்; வெஞ்சமர்க் களம் நோக்கிப் பாய்கின்றனர்!

கொந்தளிக்கும் கடலாய்—உரிமை வேட்கை குமுறுகின்ற கொப்பறையாய்-பாஞ்சாலம் காட்சி தரும் இந்த நேரத்திலேதான் நேரு வாயைத் திறந்தார்.

என்ன சொன்னார்?

‘உங்கள் கிளர்ச்சி தவறு’—என்று காரணங் காட்டினாரா?

தலைவர்களைக் கட்டிப் பிடித்து ‘கை விட்டு விடுங்கள்’—என்று வேண்டுகோள் விடுத்தாரா?

ஜனநாயகத்திலே பற்று வைக்கும் பிரதமர்கள்—நாட்டு மக்களின் ஒற்றுமைக்குப் பாடுபடும் உத்தமர்கள் செய்யவேண்டியது அதுதான்!

ஆனால் நேரு செய்தது என்ன?

பற்றி எரிகிற வீட்டிற்கு ‘பெட்ரோல்’ ஊற்றுவதைப் போல பண்டிதர் பாஞ்சால மக்கள் மீது பாணம் பாய்ச்சியிருக்கிறார். கைதானோர் தொகை மூவாயிரத்தை நெருங்குகிறதே—என்பது பற்றிக்கூட கவலை கொள்ளாமல் பொறுப்பற்ற தலைவனைப் போல், “உங்கள் போராட்டம் குறுகிய மனப்பான்மை கொண்டது; முட்டாள் தனமானது; ஞான சூன்யமானது”—என்று நாகரிக நாக்கு சொல்லக் கூசும் வார்த்தைகளை அர்ச்சித்திருக்கிறார்.

பஞ்சாபிலே ஏற்பட்டிருக்கும் நிலைமையைப் பார்க்கும்போது இந்த வாரம் இங்கிலாந்திலே உருவாகியிருக்கும் காட்சிகள் நம் கண் முன் தெரிகின்றன. மே 29-ந் தேதி அன்று 70,000 ரயில்வேத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். அதற்கு முன்பே சுமார் [illegible]0 000 துறைமுகத் தொழிலாளர்கள் ‘ஸ்டிரைக் நோட்டீஸ்’ கொடுத்து விட்டு துறைமுகத்தைத் தூங்க வைத்து விட்டார்கள். இதன் காரணமாக பிரிட்டனின் பொருளாதார வளமே பெரிய அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறது 5-ல் 4 பகுதி புகை வண்டிகள் ஓடவில்லை மீதமுள்ள வண்டிகளோ பெருகி வரும் பிரயாணிகளுக்குப் போதவில்லை. இந்த நிலைமையில் கன்சர்வேட்டிவ் கட்சி அரசாங்கம் 1926-ம் ஆண்டிற்குப் பிறகு முதன் முறையாக நெருக்கடி நிலைமையை பிரகடனப் படுத்தியிருக்கிறது.

உலக யுத்தத்திற்குப் பிறகு நெருக்கடி நிலைமை பிரகடனப் படுத்தப்படுவது இது மூன்றாவது தடவையாம்! வழக்கமாக தனி கோச்சிலே வரும் மகாராணி, இந்தத் தடவை ஸ்காட்லாந்திலிருந்து காரிலேயே லண்டன் வந்திருக்கிறார்.

—இது போன்ற நிலைமை இங்கிலாந்திலே உருவாகியிருந்த போதுங்கூட இதுவரை யாரும் கைதானதாகத் தகவல் கிடையாது!

ஆனால் இங்குதான் கேள்விப் படுகிறோம், மொழி வழி மாகாணம் கோருவோர் சாரை சாரையாகச் சிறைச் சாலைக்கு அனுப்பப் படுகின்றனர்!

அங்கே நெருக்கடி நிலைமை பிரகடனப் படுத்தப்பட்டும்கூட ஒரு ஈ, குருவியும் கைதானதாகத் தெரியவில்லை. ஆனால் பஞ்சாபிலோ ஓரிரு வாரங்களிலே ஈராயிரவர் இருட் சிறையிலே வாடுகின்றனர்!

புல்கானினைச் சந்திக்க பயணம் நடத்தியிருக்கும் பண்டிதர், தாராசிங்கைப் பார்த்து சாந்தி காணும் நிலைமையைப் பேசியிருக்கக் கூடாதா?

மாஸ்கோவுக்குப் பறந்தவர், அமிர்தசரஸ் சென்றிருந்தாரேயானால் எண்ணற்ற இளைஞர்களின் சிறை வாழ்வு தடுக்கப்பட்டிருக்குமே!

ரஷ்யாவுக்குக் கூடை-கூடையாக மாம்பழம் அனுப்பியவர் பஞ்சாபை நோக்கி ஒரு அபயக் குரல் கொடுத்திருந்தால் போதுமே—நேரு மக்களின் நண்பர்; குடியாட்சியின் காதலன்-என்பதை உலகு ஒப்புக் கொண்டிருக்குமே!

அதைச் செய்ய மறுத்தவரை நாம் எப்படி ‘ஜனநாயகவாதி’—என்று ஒப்பமுடியும்? அவரது ஆட்சியை ஜனநாயக ஆட்சி என்றால் யார்தான் நம்ப முடியும்?

‘முரசொலி’ அச்சகம் இந்த வாரத்திலிருந்து மின்சார விசை பெற்று இயங்குகிறது என்பதையும், இனி மேல் வரும் இதழ்கள் இன்னும் வண்ணமும் பொலிவும் பெற்று வரும் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்வதோடு இது வரை இடையிடையே ஏற்பட்ட கால தாமதமும் அடுத்த வாரத்திலிருந்து ஏற்படாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

—[illegible]

# பாபுராவின் பதில் !

(?) வன மகோத்சவத்தின் போது நட்ட தாவரங்களில் எத்தனை வளர்ந்து மரமாகியிருக்கின்றன?

*'மொரார்ஜி தேசாய்' மட்டும் வளர்ந்து பரவியிருக்கிறது. 'லால்பகதூர்' வளரவேயில்லை. 'ரபி அகமத் கித்வாய்' செத்துவிட்டது. 'ஆச்சாரியார்' காய்ந்து கருகிப் போய்விட்டது!*

(?) நாய்கள் சினிமாக் கொட்டகைக்குள் அனுமதிக்கப்படுவதில்லையாமே!

*ஆமாம். மனிதர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை நாய்கள் பார்த்து விட்டால், அவைகளுக்கு மனிதர்களிடமுள்ள மரியாதை போய்விடுமே!*

(?) சினிமா நட்சத்திரங்களில் எத்தனை பேர் சொர்க்கத்துக்குப் போவார்கள்?

*எல்லோருமே! ஏனென்றால் தேவதைகள் எல்லாம் நம்முடைய சினிமா நட்சத்திரங்களிடமிருந்துதான் 'கிரிக்கெட்' கற்றுக்கொள்ள வேண்டுமென்று துடித்துக்கொண்டிருக்கின்றனவாம்!*

(?) அரசியல், மத அடிப்படையில் நிறுவப்பட்டால்...?

*மறுபடியும் பிராமண ஏகாதிபத்யம் வந்துவிடும். அதாவது பழைய அவமானம் புதுப்பிக்கப்படும்!*

(?) இந்தியாவுக்கு வந்தபோது டிட்டோ என்ன கற்றுக் கொண்டார்?

*தன்னைவிட சிறிய நேரு, தன் நாட்டைவிட 11-மடங்கு பெரியதொரு நாட்டை, 48-மடங்கு பெரிய ஜனத்தொகையுடன் போட்டாக்கள் உபயோகிக்காமல் வாய்ச் சொற்களைக் கொண்டே ஆள்கிறாரே—என்று தெரிந்து அதிர்ச்சி அடைந்தார்?*

(?) ஏன் காங்கிரஸ்காரர்கள் கதர்க் குல்லாய் அணிந்து கொள்கிறார்கள்?

*தங்கள் உடலில் உள்ள மாசில்லாத வெள்ளை பாகம் அது ஒன்றுதான் என்பதைத் காட்டிக் கொள்வதற்காக!*

(?) அடுத்த பிறவியில் நீர் நேருவின் மருமகனாகப் பிறக்க விரும்புகிறீரா?

*இல்லை. என்னுடைய மாமனார் எவ்வளவு பெரிய மனிதராக இருந்தபோதிலும், என்னுடைய மனைவி எனக்குத்தான் பணிவிடைகள் செய்துவர வேண்டும் என்று கருத்து கொண்டவன், நான்!*

(?) உமக்கு 'பிக்-பாக்கெட்' கலை தெரியுமா?

*ஓ! நன்றாகத் தெரியும். பத்திரிகைத் தொழிலில் அதை 'விளம்பரம் வெளியிடல்' என்பார்கள்!*

—'பிலிமிண்டியா' —மே-1955.

## செல்வராஜ்--சுலோசனா

காலஞ்சென்ற பெரியார் திரு. ஈ. வே. கிருஷ்ணசாமி அவர்களின் புதல்வரும், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களின் சகோதரருமான தோழர் செல்வராஜுக்கும், சென்னிமலை திரு ஏ. என் சாமப்பனார் அவர்களின் புதல்வி சுலோசனாவுக்கும் சென்ற 29-5-55 அன்று காலை 9 மணிக்கு, ஈரோடு பெரியார் நகர் மன்றத்தில் வாழ்க்கை ஒப்பந்த விழா நடைபெற்றது. விழாவுக்கு திருச்சி தோழர் தெ. பொ. வேதாசலம் அவர்கள் தலைமை வகித்தார். பெரியார் ஈ. வே ரா. அவர்களும் மற்றோரும் மணமக்களை வாழ்த்தினர். முடிவில் மணமகன் செல்வராஜு நன்றி தெரிவிக்க விழா சிறப்புற முடிந்தது.

## ப. வேலாயுதம்-விஜயலட்சுமி

1-6-55 காலை 8-மணி யளவில் மன்னார்குடியில் தோழர் ப. வேலாயுதம்-தோழியர் விஜயலட்சுமி திருமணம் இனிது நடைபெற்றது. திருமணத்திற்கு தோழர் ஜி. பாலகிருஷ்ணன் தலைமை வகித்தார். அறிஞர் அண்ணா, பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன், மற்றும் தி. மு கழக முன்னணி வீரர்கள் பலரும் விழாவிற்கு வந்திருந்தனர். அன்பர்கள் மணமக்கட்கு வாழ்த்து மடல்களும், பரிசுகளும் வழங்கினார்கள். மணமகன் நன்றிகூற, தலைவர் முடிவுரையுடன் திருமண நிகழ்ச்சி முடிவுற்றது.

✶ 1-ம் பக்கத் தொடர்ச்சி

# படம் கண்டு படமெடுத்தாடும் - பார்ப்பனீயம் !

பிறந்தவர்கள்—ஆகவே காலிலிருந்து பிறந்த சூத்திரனை விட உயர்ந்தவர்கள்' — என்று வக்கணை பேசும் வேதஸ்மிருதிகளை நெருப்பிலே தள்ள முன் வருவார்களா?

'ஆனந்தவிகடன்' போன்ற ஆரிய ஏடுகள் உச்சிக் குடுமியுடன் காட்சி தரும் அம்மாஞ்சியை சனது சின்னமாக வைத்திருக்கும்போது, சென்னை அரசினரின் சுவரொட்டியில் அதைச் சுட்டியிருப்பது எப்படித் தவறாக முடியும்?

அப்படியே இருந்தபோதும் பார்ப்பனர்கள் தாங்கள் தீண்டாமையைக் கடைப் படிக்கவில்லையென்று உறுதிகூற முடியுமா? சம்பூகன் என்ற சூத்திரன் தவம் செய்தானென்று, அவன் தலையை வெட்டியெறிந்த இராமர்களை வளர்த்த பார்ப்பனீயம் தானே அது! நந்தன் என்ற திராவிடனை அன்று தீயிலே தள்ளி தெம்மாங்கு பாடிய 'தேவர் கூட்டம்'தானே இன்று திருச்சியிலே கூடி, ஜுன் 5-ந் தேதியைக் கண்டன நாளாகக் கொண்டாடுவோமென்று கூத்தாடி மகிழ்கிறது; டெல்லிக்குத் தூது அனுப்புவோமென்று துந்துபி முழக்குகிறது!

அதுமட்டுமல்ல;(இந்த விஷயம்)

"குறிப்பிட்ட மைனாரிட்டியினர்மீது வகுப்புத் துவேஷம் வளர்த்துவரும் ஒரு சில விஷமிகளைத் தூண்டி விடுவது போல் இருக்கிறது..."

—இப்படியும் எழுதியிருக்கிறார், 'இந்து'வார்!

பார்ப்பனர்கள் மைனாரிட்டியினராம்! — தலையசைக்கிறது 'இந்து'!

'நூற்றுக்கு நாலுபேர் தானே நீங்கள்! நூற்றுக்குத் தொண்ணூறு உத்யோகங்களை நீங்களே வகிக்கலாமா?'—என்று கம்யூனல் ஜீ. ஓ. வடிவிலே நாம் கூக்குரல் கிளப்பியபோது, 'தகுதி-திறமை' வாதம் பேசியவர்கள், தங்கள் வீட்டிலே தீ என்றவுடன் உண்மையைக் கக்குகிறார்கள்!

கேவலம்; சுவரொட்டியிலே உள்ள பார்ப்பனச் சின்னம் அக்ரகார வாசிகளை ஒரு அணியில் திரட்டிவிட்டது!

டால்மியாபுரம் — என்கிற பெயர் கண்டவுடன் நம்முடைய இரத்தம் எப்படிக் கொதிக்கும் என்று உணராத கூட்டம், இன்று ஒரு படத்துக்காகப் படை திரட்டுகிறது!

ரயில் நிலையத்திலே உள்ள இந்தி எழுத்துக்கள் இந்நாட்டுத் தமிழ் மகனின் கண்களைக்குத்துவதைக் காணமுடியாத கும்பல், சுவரொட்டியொன்றிற்காக, ஸ்லோகம் சொல்லும் வாயினால் போர் முழக்கம் செய்கிறது!

இதையெல்லாம் விட ஆச்சரியமான செய்தி—இந்த ஆரியக் கூத்திற்கு சென்னை அரசாங்கம் பணிந்து விட்ட காட்சிதான்!

இனிமேல் இது போன்ற சுவரொட்டிகளை வெளியிடுவதில்லையென்று சென்னை அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருக்கிறதாம்!

கனபாடிகளின் கூச்சலுக்குக் காமராசர் பணிந்திருக்கிறார்!

ஒரு சில ஆரிய வீர கேசரிகளின் ஆர்பாட்டம் அரசாங்கத்தின் போக்கையே மாற்றியிருக்கிறது!

பச்சைத் தமிழனின் துரைத்தனம் ஒரு 'இந்து'வின் குட்டித் தலையங்கத்துக்காகக் குடை சாய்ந்திருக்கிறது!

ஆச்சாரியார் காலத்திலே அந்தச் சுவரொட்டிகள் 'வாபஸ்' பெறப் பட்டிருந்தால் நாம் வாயடைத்திருக்க மாட்டோம். துணிந்து அறநிலையப் பாதுகாப்பு இலாக்காவுக் கொருஆதித் திராவிடரை அமைச்சராக நியமித்தவர் இப்போது இந்துவின் பேனா கண்டு பின்னங்கால் பிடரியில் மோத ஓடுவானேன்?

ஆச்சாரியாரை வீழ்த்திய அடலேறு ஒரு அம்மாஞ்சியைக் கண்டு நடுங்குவானேன்?

நாளை 'இந்து' ஆச்சாரியாரின் கல்வித் திட்டத்துக்கு ஆதரவுக் குரல் கொடுத்தால், காமராசர் குலதர்மக் கல்விக்கு வாண வேடிக்கையுடன் வரவேற்பு நடத்துவாரா?

'இந்து'வின் தலையங்கம் காரணமாக அரசாங்கம் ஆமையான வேடிக்கை. காமராசர் அணிந்திருக்கும் முகமூடியையே கிழித்தெறியும் போக்கு கொண்டதாய் இருக்கிறது!

இன்று அரசினர் அந்தப் 'போஸ்டர்'களைக் குப்பைத் தொட்டியிலே தூக்கி எரிந்து விடலாம். ஆனால், கொள்கையிலே பற்றுவைத்தோர் இது போன்ற சுவரொட்டிகளை சந்து பொந்துகளெங்கும் ஒட்ட ஆரம்பித்தால், 'இந்து' வார் என்ன செய்யமுடியும்? தீண்டாமை என்னும் தேளின் கொடுக்கை நறுக்கி எறியத் துடிக்கும் தீராதி தீரர்கள் சுவையான கருத்து விளக்கம் தரும் அந்தச் சுவரொட்டிகளைத் தாங்கும் பலகைகளாக—சுவர்களாக-மாறினால், இந்த அரசாங்கம் அந்தத் தாள்களைக் கிழித்தெறிய முன் வருமா?

அப்படி ஒரு நிலைமை வந்தால், காந்தியடிகளின் 'அரிஜன்' படித்து, தீண்டாமை பற்றி புடம் போட்டு எடுத்த தங்கக் கருத்துக்கள் கொண்டிருக்கும் தேசியத் தோழர்கள்கூட காமராசருக்கும், அவர் அடி பணிந்து நிற்கும் 'இந்து'வாருக்கும் எதிராகத்தான் இருப்பார்கள் என்பதை நம்மால் சொல்லிக் காட்டாமலிருக்க முடியவில்லை. ஃ



# நினைவின் சாம்பல்

( முல்லை-சத்தி )

அன்று வழக்கம்போல எங்களின் 'வம்பு மடமு'ம் கூடியது. சரித்திரப்பேராசிரியர்பூர்ணலிங்கம் எங்களுடன் கலந்துகொண்டது, சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிவதுபோல இருந்தது. சிரிக்கச் சிரிக்க கதைகள் சொல்லுவார்; சரித்திரப் பின்னணியோடு அவர் கூறும் கதைகள் கேட்க இனிமையாக இருக்கும். அவர் வாயை சிறிது திண்டினுல்போதும், வண்டி வண்டியாக வம்பளந்து எங்களை எல்லாம் திணற அடித்துவிடுவார். அன்று 504 ஆட்டமும் எங்களுக்கு சுவைக்கவில்லை. 'கேரமு'ம் 'போர்' அடித்தது. மாலைப் பொழுதை எப்படிக் கழிக்கலாம் என்று யோசித்துக்கொண்டிருந்த நேரத்தில், நண்பன் நாகு பாட ஆரம்பித்தான். "ஐயையோ! போதுமே - பாடாதேடா! வேறு எந்த தண்டனையாவது கொடு; தலை வணங்கி ஏற்றுக் கொள்கிறேன். ஆனுல் உன் பாட்டை — பாட்டா அது; வேட்டை நாயின் குரல் கேட்கும் தண்டனை மட்டும் அளிக்காதே— என்னுல் தாள முடியாது..." என்றேன் நான்.

"டேய்! நீ இசையை ரசிக்கத் தெரியாதவன்— படம் விரித்தாடும் பாம்பும் இசைக்குக் கட்டுப்படும்! கல்நெஞ்சையும் கரைய வைக்கும கானம்! இசையை ரசிக்கத் தெரியாத கசடனுப், அவுரங்கசீப்பின் நேர் வாரிசு நீ — உனக்கு எங்கே தெரியப்போகிறது இசையின் இன்பம்-மகிமை எல்லாம். இதழ் விரித்து சிரிக்கும் மலரின் மணம், மந்திக்குத் தெரியாதது ஆச்சரியமல்ல..."- வெடித்தன வார்த்தைகள். இதுவரையில் மௌனமாகயிருந்த பேராசிரியர் பூர்ணலிங்கம் பேச ஆரம்பித்தார்.

"நாகு! அவுரங்கசீப்பைப் பற்றி உனக்கு என்ன தெரியும்? புரியாத, தெரியாத விஷயங்களில் தலையிடக் கூடாது. இசையை ரசிக்கத் தெரியாத மூடனல்ல அவுரங்கசீப். இசைவாணர்களையும், பாவாணர்களையும் ஆதரித்து, தங்க நாணயங்களை அள்ளி அள்ளி அளித்தவன்தான். இசையின் நாத வெள்ளத்தில் குளித்து மிதந்தவன்தான். ஆனுல் அவன் கேட்டு மகிழ்ந்த இசை—அவனது அரவணைப்பிலே வளர்ந்த இசை—அவனது வாழ்க்கையிலே ஒரு சோகச் சித்திரத்தை உண்டாக்கிவிட்டது. அதன்பின் தான் அவன் இசையை-தன் வாழ்க்கையை பொசுக்கிய தீயை —வெறுக்க ஆரம்பித்தான். அந்த சோக நிகழ்ச்சியைக் கூறுகிறேன், கேள்" என்றார். நாங்களும் காதைத் தீட்டிக் கொண்டோம், கதையைக் கேட்க.

★

"மொகலாய சாம்ராஜ்யத்தின் ஏக சக்கராதிபதி அவுரங்கசீப்பின் கொலுமண்டபம். அக்குயில்கானின் இசை நாதத்தில் மிதந்துகொண்டிருந்தது. வேணுகானத்தையும், வீணை நாதத்தையும் தோற்கடித்தது அவனின் மென்மைக் குரல். மக்களின் மனதை எல்லாம் சொக்கவைத்தது அவனது கானம். அந்தப்புரத்து மங்கையரின் சிந்தையெலலாம் குளிரச் செய்தது அந்த இளவலின் இன்னிசை. கல்நெஞ்சனுன அவுரங்கசீப்பின் நெஞ்சையும் நெகிழச் செய்தது அந்த மதுர கீதம். மதுடியின் ஓசையில் மயங்கும் நாக சர்ப்பத்தைப்போல, சபையோர் எல்லாம் அக்குயில்கானின் இசையில் மயங்கி இருந்தனர். மக்களின் இதயத்தை எல்லாம் தடவிச்சென்றது இசைக் கோமானின் குரல். 'கஜல்' பாட முடித்தான் — கரகோஷம் வானைப் பிளந்தது.

"அக்குயில்கான்! எங்கள் அகமெல்லாம் மகிழ இசை பொழிந்த இளவலே! நீ வாழி! சிந்தையை கீதத்தால் குளிரச் செய்தவனே! இந்தத் தங்க மோகராக்களை ஏற்றுக்கொள்! என் கொலு மண்டபத்தின் கதவுகள் என்றும் திறந்திருக்கும், உனக்கு. நீ வாழ்க! உன் இசை வளர்க!"-அவுரங்கசீப் தங்கத் தாம்பாளத்தில் மோகராக்களைக் குவித்து அக்குயில்கானுக்கு அளித்தான்.

"மன்னர் மன்னு! என்னைப் பாராட்டி வாழ்த்திய தங்களுக்கு என் இதய நன்றி! இந்த மோகராக்கள் எனக்கு அல்ல —நான் வணங்கும் கலாதேவிக்கு நீங்கள் சூட்டிய தங்க முடி. தங்களின் அன்பின் அரவணைப்பிலே என் கலாதேவி நிச்சயம் வளருவாள்..." சபையும் கலைந்தது. மகிழ்ச்சி வெள்ளத்தில் நீந்தியவாறு அக்குயில்கானும் தன் இல் நோக்கிச் சென்றுன். மாளிகையின் உப்பரிகையில மெல்லிய சல்லாத் துணிக்கப்பால் அமர்ந்திருந்த இளவரசி— அவுரங்கசீப்பீன் ஏகப் புதல்வி ஜெபுனிசாவின் கண்களும் அவனைத் தொடர்ந்தன.

★

நீல நிற வானத்தில் வானத்துப் படகு தவழ்ந்துகொண்டிருந்தது. மஞ்சத்தில பரப்பிய மகிழ மலர்கள் போல, வானில் வைரமணிகள் சிதறிக் கிடந்தன. அரண்மனையின் நந்தவனத்தில் அமைதியில்லாமல் அலைந்துகொண்டிருந்தாள், வலையில் சிக்கிய மானைப்போல, புவியாளும் மன்னனின் புதல்வி ஜெபுனிசா. மலரின் மணமும், தென்றலின் இனிமையும், இளவரசியின் இதயத்தைக் கவரவில்லை. சுருண்ட கேசத்தை கோதியபடியே, மருண்ட பார்வையுடன் உலாவிக் கொண்டிருந்தாள்.

"இளவரசி!" என்ற குரலைக் கேட்டுத் திரும்பினுள் தேன் மொழியாள். மகிழ்ச்சியால் அவளின் முகம் மலர்ந்தது, கதிரவனைக் கண்ட கமலம் போல!

"இசைவாணரே!வரமாட்டீரோ என்று நினைத்தேன்!"

"இளவரசி! அகிலத்து அரசனின் மகளாகிய தங்களின் ஆணையை மீறும் தைரியம் எனக்கு ஏது?தங்களின் கட்டளையை நிறைவேற்ற காத்திருக்கிறேன், தேவி!"

"குயிலைப் பழிக்கும் குரலால் என் இதயக் கோயிலில் குடி புகுந்தவரே! உமது இசை மழையில் சொக்கிய கலாப மயில் நான்; உங்கள் இசய மேடையில் என்னை ஆடச் செய்யுங்கள்"

"இளவரசி!நீங்கள் கூறுவது..."

"புரியும்படிக் கூறுகிறேன்- 'சரி' என்பீரா?"

"புதிர் போடாதீர்கள், தேவி!"

"என் வாழ்வின் கதிரே! இந்த தளிர் மேனியாள் படர உங்கள் அன்புக் கரங்களை அளியுங்கள்! அன்பரே! அல்லும் பகலும், கனவிலும் நனவிலும் உங்களை நினைத்து நினைத்து உருகும் என்னை ஏற்றுக்கொள்ளுங்கள். கண்ணுளா! மண்ணுக்கி விடாதீர்கள் என் எண்ணத்தை."

"என்ன...! நானு...? கோமகளே, வேண்டாம் இந்த விபரீத ஆசை! பாமாலை தொடுத்து பிழைப்பவன் நான்; புவியாளும் மன்னன் புதல்வியின் கரங்களைப் பற்றினுல், என் 'ஆவி' பறந்துவிடும், தேவி! மன்னித்து விடுங்கள்! என் இதயம் தாங்காது தங்களின் அன்பை!"

"கன்னல் மொழியால் என்னைக் கவர்ந்து விட்டீர்கள்—இன்னல் எது வந்தாலும், இன்பமே, இந்த செகத்தில் நம்மை யாரும் பிரிக்க முடியாது. புவியாளும் மன்னன் மகள்தான்; கவியரசின் காலடியில் விழக் காத்திருக்கிறேன். பூத்துக் குலுங்கும் புது மலரைக் கசக்கி விடாதீர்!"

"இளவரசி! தேன் சொட்டும் பேச்சும், வான்நிலவைப் பழிக்கும் முகமும், மின்னும்இருகண்களும், மின்னல் நிகர் கன்னங்களும், இன்பம் ஊறும் அதரங்களும், விண்மீன் போல் ஒளி சிந்தும் பற்களும், மலர் மேனியும், தளிர்க் கரங்களும், பேசும் பதுமையே—என் நெஞ்சைப் பிளந்தாலும், காவலனின் கூரியவாள் உன்னைத் தொட முடியாதபடி தடுக்கிறதே! தோகை மயிலாளே! வாகை சூடிய மன்னனின் மகள், பாடிப் பிழைக்கும் என்னை மணக்க முடியுமா? மன்னர்தான் இணங்குவாரா?"

"மன்னர் விரும்பினுல் மாளிகையிலே உலாவுவோம்—இல்லையென்ருல் குடிசையிலே வாழ்வோம்! மணிமுடி தரித்த மன்னனின் வாளுக்கு நம் அன்பைப் பிரிக்கும் சக்தி ஏது? என் துரையே, அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்?"

"என் தெய்வமே! பல வளைவுகள் நிரம்பிய வாழ்க்கைப்பாதை, காதல் முனையை அடைந்ததும் எங்கேயோ அழைத்துச் செல்கிறது நம்மை. வாழ்வோம்; அல்லது மாள்வோம்!"


ஜெபுனிசாவின் தளிர் கரங்கள் இசைவாணன் அக்குயில்கானின் முதுகை வருடின. அதரங்கள் மோதின. கன்னங்கள் ஒட்டின. அந்த இளம் காதலர்களை வாழ்த்துவதுபோல் மலர்க் கொடிகள் மலரை உதிர்த்தன!

★

நந்தவனத்தில் ஆரம்பித்த அவர்களின் காதல் நாளடைவில் அந்தப்புரத்திலே நுழைந்துவிட்டது. இரவெல்லாம் இளவரசியின் அந்தப்புரத்தை அலங்கரித்தான் அக்குயில்கான். அவனின் இன்ப கீதம் தென்றலில் மிதந்து செல்லும். கவலையற்று காதல் வானில் ஒலித்த அவர்களின் கீதம், மன்னனின் காதுகளிலும் விழுந்தது.

★ தொடர்ச்சி 8-ம் பக்கம்






## 26. கரையிலிட்ட மீன்!

"ஏழுவானுக்குத் தொழுவானுக்கும் இடையிலே...
காக்கை பறந்த நிழலிலே...
கள்வர் புகும் வழியிலே...
கண்டாலும் 'கம்மாளர்' கண்ணிலே...
எழுபது கோடி பசும்பொன்... "

"அடப்பாவி ஐயப்பனா?" என்று மாயாண்டி அலறியதும், "ஆமாம்; ஐயப்பன்தான்! அடே கிழவா! எங்கே ஓடப் பார்க்கிறாய்? மரியாதையாக நில்!" என்று பயங்கரமாகக் கத்திக்கொண்டு உரக்கச் சிரிக்க ஆரம்பித்தான் ஐயப்பன். நடுநடுங்கியபடி பரிமளா இங்குமங்கும் ஓடினாளே தவிர, இன்னது செய்வதென்று அவளுக்குப் புரியவில்லை. துரை கொஞ்சம் பின்வாங்கி நின்றுகொண்டு, ஐயப்பனை எதிர்க்கத் தயாரானான். கிழவரும் தன் உடலை வளைத்து நிமிர்த்தி, ஐயப்பனின் முதல் தாக்குதலிலேயிருந்து சமாளித்துக் கொண்டு துரையுடன் சேர்ந்து கொண்டார்.

"கிழவா-நீ தப்பவே முடியாது! உயிர்மேல் ஆசையிருந்தால் கையில் உள்ளதை இப்படிக் கொடுத்துவிடு! — ஏ, பொடியனே! நீயும் விலகிப் போய்விடு--வீணாக வம்பை விலைக்கு வாங்காதே!" என்று கர்ச்சனை புரிந்தான், சரகரத்த தொனியிலே ஐயப்பன்.

அவனது கொடூரமான பார்வையும், கையிலே பிடித்திருக்கும் பளபளப்பான கத்தியும், ஏதோ ஒரு திடுக்கிடும் முடிவை விரைவிலே உண்டாக்கும் அறிகுறிகளாக அமைந்திருந்தன. துரை, பின்னோக்கியே நகர்ந்து நகர்ந்து, மெதுவாக பீரோவின் பக்கம் வந்துவிட்டான். ஐயப்பனும் அவர்களிருவரையும் தொடர்ந்தபடி மெதுவாக முன்னோக்கி, தன் தடித்த கால்களை ஊன்றிக்கொண்டே நகர்ந்தான். பீரோவிடம் வந்துவிட்ட துரை, சடக்கெனப் பீரோவின் கதவைத் திறந்து, அதிலேயிருந்த கைத்துப்பாக்கியை எடுத்துக் கொண்டான். அது கண்ட பரிமளாவுக்கு உயிர் வந்தது போலாயிற்று. மாயாண்டிக் கிழவரும் மனத் துணிவு பெற்றார்.

"ஐயப்பா! ஜாக்ரதை! நீ சொன்னதை இப்போது திருப்பிச் சொல்லுகிறேன். உயிர் வேண்டுமானால் – இப்போதே ஓடிவிடு!" என்று கிழவர் அழுத்தந் திருத்தமாகவும் ஆத்திரத்தோடும் கூறினார்.

"தெரியுமடா, அது நாடகத் துப்பாக்கி என்று!" —இதைக் கூறிக்கொண்டே நரி ஊளையிடுவது போல சிரித்துக் காட்டினான் ஐயப்பன்.

துரைக்கு ஆத்திரம் பொங்கியது. தன்னால் மன்னிக்கப்பட்டு விரட்டப்பட்டவன், தன்னையே மிரட்டிக்கொண்டு எதிரே நிற்கிறானேயென்று துரை கொதித்தான். துப்பாக்கியை அவனுக்கு நேராக நீட்டி, "போகிறாயா? இல்லையா?" என்று உறுமினான்.

ஐயப்பன் பதில் சொல்லவில்லை; சிரிக்கத் தொடங்கினான் மறுபடியும்.

"சுட்டுத் தள்ளிவிடுவேன்— ஜாக்ரதை!" என்று துரை மீண்டும் கத்தினான்.

"சுடுடா பார்ப்போம்! சூரப்புலி மகனே சுடுடா!" என்றபடி ஐயப்பன் அருகே நெருங்க ஆரம்பித்தான். ஏறத்தாழ ஐயப்பனின் கையிலுள்ள கத்தி துரையின் நெஞ்சுக்கு நேராக நின்றது. சமயம் பார்த்திருந்த துரை கத்தியைத் தட்டிவிட்டு, ஐயப்பனின் மார்பில் பலமாகத் தாக்கினான். கத்தி கீழே விழுந்தது கண்ட ஐயப்பன், அதை எடுக்க அவசரமாகக் குனியவே, ஏற்ற சந்தர்ப்பம் இதுவென எண்ணிய துரை, அவனது கழுத்தை கெட்டியாகப் பிடித்துக்கொண்டான். இருவரும் ஒருவரையொருவர் விடாமல் சண்டையிட ஆரம்பித்தார்கள். இருவர் முகத்திலும் மாறி மாறி குத்துகள் விழ ஆரம்பித்தன. ஐயப்பனின் முரட்டுத்தனமான தாக்குதலை துரையினால் சமாளிக்க இயலாது எனக்கண்ட மாயாண்டி, ஐயப்பனின் தலையிலும் மார்பிலும் தன் இஷ்டம் போல் தாக்க ஆரம்பித்தார். மாயாண்டியின் குறுக்கீட்டை ஐயப்பன் வெகு சுலபமாக சமாளித்துக் கொண்டான். அவர் அருகே வரும்போதெல்லாம் தன் காலால் பலங்கொண்டமட்டும் அவரை உதைத்து உருட்டினான். அதோடு துரையையும் தாக்கிக்கொண்டிருக்கத் தவறவில்லை.

அத்தான், அந்த முரடனை எதிர்ப்பதற்கு மிகவும் கஷ்டப்படுவதையும், துணைக்கு செல்ல முடியாதபடி கிழவர் தவிப்பதையும் கண்ட பரிமளாவுக்கு பயம் அதிகமாகியது. ஐயப்பனோ, கிழவரைக் காலால் உதைத்துக்கொண்டே துரையின் முகத்தில் தன் முரட்டு முகத்தால் மோத ஆரம்பித்தான். துரை அவனிடம் நன்றாக சிக்கிக்கொள்ளவே, அவனை நகர்த்திக்கொண்டே போய் கத்தியைக் கையில் எடுக்க முயற்சி செய்தான் ஐயப்பன். அதை உணர்ந்த கிழவர், கத்தி[illegible]யை அவனிடமிருந்து தள்ளி விடுவதற்காக ஓடும்போது, நாற்காலி தடுக்கி தலைகுப்புற கீழே விழுந்தார். அவரைத் தூக்கி விட்டு, பரிமளா கத்தியிடம் ஓடினாள். ஆனால் அதற்குள் ஐயப்பனின் கையில் கத்தி அகப்பட்டுவிட்டது. கத்தி வைத்துள்ள அவனது கையை துரை பலமாகப் பிடித்துக் கொண்டான். அந்தப் பிடியிலிருந்து துரை சிறிது தளருவானேயானாலும் தன் உயிரை இழக்க வேண்டியதுதான். இதைப் பார்க்கும் பரிமளாவுக்கு எப்படியிருக்கும்? ஐயப்பனை ஒழித்துக்கட்ட என்ன செய்யலாமென்று யோசித்தாள். சுற்று முற்றும் பார்த்தாள். இருட்டிலே ஒரு மூலையில் கைத்துப்பாக்கி கிடந்தது. அதை ஓடிப்போய் எடுத்தாள். ஐயப்பனிடமிருந்து அத்தானைக் காப்பாற்ற வேண்டுமானால், கொலை செய்வதை தவிர, வேறு வழியில்லையென்[illegible] கண்டாள்.

"ஏய்! அவரை விடுகிறாயா [illegible] சுடட்டுமா?" என்று ஆவே[illegible]மாகக் கூச்சலிட்டாள். அ[illegible]ளது கூச்சலை அவன் காதி[illegible] வாங்கவேயில்லை. நிலை [illegible] விபரீதமாகிவிடும் எனக் கண்[illegible] பரிமளா, கைத்துப்பாக்கியி[illegible] விசையை அமுக்கினாள். ஐய[illegible]பனுக்கு சரியாகக் குறிவைத்[illegible] ஆனால், அதில் சப்தம் தா[illegible] கேட்டதே தவிர, ரவை வெ[illegible] படவில்லை. புகை கிளம்பி[illegible] அது நாடகத் துப்பாக்கித[illegible] என்பதை பரிமளா புரி[illegible] கொண்டாள். ஐயப்பன் [illegible]

ரமாகச் சிரித்தான்-பைத்தியங் கொண்ட நாய்போலக் குரைத்தான்— "அது நாடகத் துப்பாக்கி" என்பதை அந்த சிரிப்பு, குரைப்பு மூலமே விளக்கினன். கிழவரும் ஏமாற்றத்தோடு நின்றார்.

ஐயப்பனை நெருங்கவும் முடியவில்லை அவரால். அங்குள்ள நாற்காலி, பலகை, எல்லா சாமான்களையும் தூக்கி ஐயப்பன் மீது வீசிப் பார்த்துவிட்டார். சில குறிதவறி வேறு பக்கம் விழுந்தன. சில அவன் மேலே விழுந்து தோலில் சிறு காயத்தை ஏற்படுத்தியதோடு தங்கள் உருவத்தை வீணாக்கிக் கொண்டன.

நிலைமை மிஞ்சிவிட்டதை உணர்ந்த பரிமளா, வாயிற்புறத்துக் கதவைத் திறந்து கொண்டு வெளியே ஓடினாள்.

"பரிமளா! எங்கும் ஓடாதே இருட்டில்!" என்று கிழவர் கத்தினார்.

"இருங்கள்; இதோ வந்து விடுகிறேன்" என்று கூறிக் கொண்டே பரிமளா ஓட ஆரம்பித்தாள்.

தெருவிலே யாரையாவது துணைக்குக் கூப்பிடுவோம் என்ற முடிவுடன்தான் அவள் அவ்வளவு அவசரமாக ஓடி வந்தது! துரை வீட்டுக்கு மிக அருகாமையிலே வீடுகள் இல்லாததால், பரிமளா, உரத்த குரலெடுத்து "ஐயோ ஆபத்து-ஆபத்து - யாராவது வாங்களேன்!" என்று கூவினாள். அவளது சப்தம் மட்டும் எதிரொலித்ததே தவிர, ஆதரவுக் குரல் கொடுக்க யாரும் வரவில்லை. அந்த இருட்டிலே—அயர்ந்து தூங்குகிற நிசி வேளையிலே யார்தான் வருவார்கள்? பரிமளா இன்னும் சிறிது தூரம் ஓடிப்போய்க் கத்திப் பார்த்தாள், "ஐயோ...ஓடி வாங்க... ஆபத்து! ஆபத்து!" என்று!

அவள் ஓடிய திசையிலேயிருந்து அவளை நோக்கி ஒரு வெளிச்சம் வந்தது. வெளிச்சத்தைக் கண்டதும் பரிமளாவுக்கு அவளையறியாமல் ஒரு தைரியம் மூண்டது. ஒளி வந்த திக்கு நோக்கி ஓடினாள்.

நாலைந்து பேர் வேகமாக வருவதும் தெரிந்தது. பரிமளாவுக்கு இன்னும் துணிவு அதிகமாகியது.

அவர்களை நோக்கி வேகமாக ஓட ஆரம்பித்தாள். வருபவர்களை வெளிச்சத்தின் உதவியால் போலீஸ்காரர்கள் என்று அடையாளம் கண்டுகொண்டாள்.

"ஐயா! ஐயா! ஓடிவாங்க—பெரிய ஆபத்து! சிக்கிரம் சிக்கிரம்"-கதறியபடி அவர்களிடமே வந்துவிட்டாள் பரிமளா.

"இந்நேரம் என்ன ஆகியிருக்குமோ? தன ஆசை அத்தானை அந்த அக்ரமக்கார முரட்டுப் பயல் என்ன செய்தானோ? தான் போய்ப்பார்க்கும் போது அத்தானின் நிலைமை என்னவோ? உயிரோடு பார்க்க முடியுமோ இல்லையோ! 'பொன்னே! பூவே' என்றெல்லாம் கன்னல் மொழி உதிர்த்து காதல் கீதம் பாடிய அத்தானின் இதழ்களில், தன் இதழ்களை இனியொருமுறை ஒற்றியெடுக்க முடியுமோ; முடியாதோ?"—

இப்படியெல்லாம் எண்ண அலைகள் குமுறியழுதிட, ஓட்டமும் நடையுமக இருளிலே தவித்த பரிமளாவின் எதிரிலே நின்ற அந்த "ஆபத்பாந்தவர்கள்" யார்?

போலீஸ்காரர்கள்தான்! பரிமளாவுக்கும் பூரிப்பு ஏற்பட்டது. போலீசாரே உதவிக்கு வந்தது அவள் எதிர்பார்க்காத சம்பவமல்லவா!

கண்களிலே புதிய ஒளி பெற்று நின்றாள் பரிமளா ஒரு போலீஸ்காரர் தன் கையிலேயுள்ள அரிக்கன் விளக்கைத் தூக்கி அவள் முகத்துக்கு நேராகப் பிடித்து, "யாரம்மா நீ?" என்று கேட்டார். அவர் கேட்டு முடிப்பதற்குள் "இவள் தான் பரிமளா" என்ற ஒரு குரல் கேட்டது. அந்தக் குரலை எழுப்பியவர் போலீஸ்காரர் அல்ல; ஆனால் போலீஸ்காரரோடு வந்தவர்தான்.

"யார்?" என்று திகைத்தாள், தீ மிதித்தவள் போல பரிமளா!

"யாரா? நான்தான் உங்க அப்பன் தாண்டவன்" என்று பதில் வந்தது. ஆம், பரிமளாவின் தந்தை தாண்டவன்தான் போலீசாருடன் வந்தவர். பரிமளாவைப் போலீசார் சூழ்ந்து கொண்டார்கள் பரிமளாவின் மனநிலை கற்பனைக்கு எட்டக் கூடியதா என்ன? — கரையில் விட்ட மீன்போலானாள், அந்தக் கட்டழகி!

[வளரும்]

# குறளோவியம்

மலையென மோதிய மாற்றாரின் படையைத் தூள்தூளாக்கிவிட்டுத் திரும்பும் மாவீரன், மழுங்கிப் போயிருக்கும் தன் வேலின் கூர்மையைக் காணுகிற நேரத்தில்—இப்படித்தான் நம் வருகையை நோக்கி நோக்கிக் காதலியின் வேல்விழிகளும் மங்கியிருக்கும் என்று கவலை கொள்கிறான். மன்னன், தனக்கென ஏற்பாடு செய்த பரிசளிப்பு விழாவிலேகூட மனமின்றிக் கலந்துகொள்கிறான். பாவை தரும் பரிசுகளைப் பெற்றுக்கொள்ளக் காத்திருக்கும் தன் கன்னத்தைத் தன்னையறியாமல் தடவிப் பார்த்துக்கொள்கிறான். ஓடி வருகிறான் வீடு நோக்கி. அவன் எதிரே வந்ததும் — வந்து, 'வஞ்சீ!' என அழைத்ததும்கூட அவளுக்குத் தெரியவில்லை—அப்படி மெய்மறந்து வழிமேல் விழி வைத்துக் கிடக்கிறாள், 'வரக் காணேனே கண்ணாளனை' என்ற சோக கீதத்தின் அலைகளை எழுப்பியபடி!

'த்சு' என்ற ஒலிக்குப் பிறகே திடுக்கிடுகிறாள். கன்னத்தை ஈரமாக்கியவன் தன் எண்ணத்தில் நிறைந்துவிட்ட மன்னவன்தான் என உணருகிறாள்-பிறகு பேச்சில்லை!

அன்றிரவு பவனிவரும் நிலவுக்கு இருவருமே வாழ்த்துப் பாடுகிறார்கள் பள்ளியறையிலே துள்ளி விளையாடுகிறார்கள். ஒருவரையொருவர் இழுத்தும் — போர்த்தும் — இதழோடு இதழ் சேர்த்தும் இன்ப விருந்து அருந்துகிறார்கள். இன்ப விருந்து இன்னும் சுவையாக இருப்பதற்கு ஒரு அருமையான கனியையும் அளிக்கிறார் திருவள்ளுவர், காமத்துப் பால் வாயிலாக!

அந்தக் கனி — முக்கனியினும் சுவையானது! முத்தக் கனிக்கு மூத்த முழுமுதல் கனி அது! சித்தங் களிப்பேற்றும் சிற்றின்பக் கனிக்கு அடிப்படை அமைக்கும் அன்புக் கனியாகும் அது!

அந்தக் கனியின் பெயர்தான் "ஊடல் கனி"—இன்ப போதையூட்டும் இந்தக் கனியை உண்ட பிறகே இளங் காதலர்க்கு ஆனந்த மயக்கம் ஏற்படுகிறதாம். இதை உண்ணாது தேடும் இன்பம், உருசி உடையதே எனினும் — 'முழுமை' அடைந்ததல்ல என்பது வள்ளுவர் கண்ட உண்மை-வாழ்வில் துணைபெற்றோர் வழங்கும் அனுபவ ஏடு!

கட்டிலறையிலே—கணவனும் மனைவியும் செல்லமாக சண்டை போட்டுக் கொள்ளுங்கள் — ஏன் சண்டை போட்டுக் கொள்ள வேண்டும் தெரியுமா?-ஒன்று சேருவதற்காக! ஊடல் புரிக! ஏன்? கூடுவதற்காக!-இண்டல் நிறைந்த அழகான உண்மையல்லவா இது! செல்லச் சண்டை-பிறகு இருவரும் தனித்தனியே!—ஓரிரு நாழிகைகள் நகருகின்றன அதுவரைகூட பொறுக்காது அதற்குள்ளாகவே மங்கிய ஒளியில் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தல்-இருவரும் ஏககாலத்தில் பார்த்துக் கொண்டு ஒருவருக்கொருவர் நாணுதல்-நெருங்குதல்-கரம்படுதல்-'சூ! என்னைத் தொட வேண்டாம்' என்ற கடுமொழி—ஆனால் கரும்பை வெல்லும் மொழி! அவன் கையை எடுத்துக் கொள்ளல்—பிறகு அவள் அவன் மீது கைபடுமாறு நெருங்கல்—'அட-நீ ஏன் என்னைத் தொடுகிறாய்?'-அவன் சீறுதல் செல்லமாக!

"நீங்கள் மட்டும் ஏன் தொட்டீர்களாம்?"—உரிமைக் குரல் இப்படி!-'நீயும் தொடு; நானுந் தொடுகிறேன்"-ஒருவருக்கொருவர் போட்டா போட்டி!—பிறகு...'ஊடல்கனி' தந்த உற்சாக வெள்ளம்!—இந்த ஊடல் எவ்வளவு அவசியமானது என்பதைத்தான் வள்ளுவர் அழகாக எழுதிக் காட்டுகிறார்-இதோ குறள்:—

"ஊடுதல் காமத்திற்கு இன்பம்
அதற்கு இன்பம்
கூடி முயங்கப்பெறின்"

— கருணா

★

# ஒப்பற்ற கலை விருந்து!
## ஒரே நாள் மட்டும்!!

**ஜூன் 19! ஜூன் 19!**

ஞாயிறு மாலை 6-30 மணிக்கு
சென்னை தியாகராயர் கல்லூரி மண்டபத்தில்
மு. கருணாநிதி எழுதிய

# மணி மகுடம்

(புதிய நாடகம்)

இலட்சிய நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன், டி. வி. நாராயணசாமி, எம்.என். கிருஷ்ணன், பி. எஸ். வெங்கடாசலம், எம். என. ராஜம், இந்திரா,
**மற்றும் ராஜேந்திரன் நாடக மன்றத்தார்**
நடிக்கிறார்கள்.

★ தமிழகத்து நாடக மேடையிலே புதியதோர் திருப்பம்!
★ கொள்கை விளக்கும் ஓவியம்!
★ கொஞ்சு தமிழ்க் காவியம்!
★ முற்றிலும் புதிய அமைப்பு!

★

போகபோக்கியத்தின் மத்தியிலே ஒரு புத்தன் தோன்றினான்! இதோ, பொன் மலைகளுக்கிடையே ஒரு புதுமைப் பித்தன் தோன்றுகிறான்!

**மேல் நாட்டுக் கதையொன்றின் கருப்பொருளை மட்டும் மையமாக வைத்து, முற்றிலும் தமிழ் நாட்டுக்கு ஏற்ற வகையில் பெருவாரியாக மாற்றியமைத்துப் பின்னப்பட்ட பெருமைமிகு நாடகம்.**

★ ★

ஏழைகள் சமுதாயத்திற்குப் பணிபுரியும் ஏந்திழை ஒருத்தி-
அவள் இருதயத்தில் குடியேறத் துடிக்கும் இலட்சிய மனிதன் ஒருவன்—
இவர்களுக்கிடையே ஏழடுக்கு மாளிகையிலேயிருந்து வீசுகிற புதுமைத் தென்றல்!
அந்தத் தென்றலிலே கலந்து வரும் தீஞ்சுவை தமிழ்தாம்,
''காதலிலே கவிதையிலே களம் போகும் பேச்சு!''
என்ற காதல் கீதம்!

★ ★ ★

மக்களை ஏய்த்து வாழும் ''மக்கள் தொண்டன்.''
மதி தந்து விதியை விரட்டும் ''மணிமகுடம்.''
இந்த விசித்திரத்திற்கு விளக்கம் தேவையா?

**'மணிமகுடம்' காணுங்கள்!**

★ 'மணிமகுடம்'—ஒரு நாடு!
★ 'மணிமகுடம்'—ஒரு ஏடு!!
★ 'மணிமகுடம்'—மக்களுக்குக் கேடு!!!

ஆனால்,
**'மணிமகுடம்' நாடகம்-மக்களுக்கு விருந்து மட்டுமல்ல; மடமையோட்டும் மாமருந்து!**

உணர்ச்சி மிகுந்த நடிப்புகள் உத்வேகம் நிறைந்த வசனங்கள்! இசையோ, முக்கனியின் சாறு வீறுபெற-நல்ல பேறு பெற- மணிமகுடம்' காணுங்கள்!

★ ★ ★ ★

ஜூன் 19 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு
சென்னை தியாகராயர் கல்லூரி மண்டபத்தில்!

# மணி மகுடம்

கருணாநிதி தீட்டியது-ராஜேந்திரன் நாடக மன்றத்தார் நடிப்பது.

**டிக்கெட் விபரம்: ரூ. 3, 2, 1, அணா 8**

அமைப்பாளர்: கே. வி. ராமய்யா.


★ 5-ம் பக்கத் தொடர்ச்சி

வெகுண்டெழுந்தான். சீறினான் புலிபோல. ''அரசனின் மகள் ஆண்டியின் கரங்களிலே தவழ்வதா? அடுக்குமா? அடக்குகிறேன் அவனின் துடுக்கை! பொன்னும், மணியும் அளித்து ஆதரித்த என்னையே பழிச்சொல்லுக்கு ஆளாக்கிவிட்டான. ஒழித்துவிடுகிறேன் சதிகாரனை சதிராடும் என் சிங்காரச் செல்வியின வேல்விழியில் புகுந்தவனை என் வாள் கொண்டு வீழ்த்துகிறேன்! பழிகாரன், அழித்துவிட்டானே என் ஆசைக் கனவை எல்லாம்! ஆதவனும் நுழைய அஞ்சும் அந்தப்புரத்திலே, கத்திப் பழைக்கும் இந்தப் பஞ்சை புகுந்துவிட்டானே; புகுந்தது மாத்திரமல்லாமல் என் இளவரசியின் இதயத்திலும் குடி ஏறிவிட்டானே! என் குடிகெடுத்த கேடனின் வாழ்வை முடித்து விடுகிறேன்'' என்று முடிவுக்கு வந்தான் முடிமன்னன்.

★

இரவு! நடுநிசி! உலகமே இருட்டு தேவதையின் மடியிலே புதைந்து கொண்டிருந்தது. இளவரசியும், கவியரசனும், கனகமணிக்கட்டிலிலே, இன்பக்காவியம் தீட்டிக் கொண்டிருந்தனர். கதவு தட்டும் சப்தம் கேட்டு திடுக்கிட்டனர். அருகிலே இருந்த வெந்நீர் பானையிலே, தன் காதலனை மறைத்து வைத்து, கதவைத் திறந்தாள், ஜெபுனிசா. கோபம் கொப்பளிக்கும் தன் தந்தையின் முகத்தைக் கண்டதும் நடுநடுங்கினாள்.

''அப்பா...''

''மகளே!...என்னம்மா செய்கிறாய்? இன்னமும் தூங்கவில்லையா?''

'தந்தையே! ஏன் திடீரென்று...?

''உடல்நலம் சரியில்லை உலவிக் கொண்டிருந்தேன் — உல்லாச கீதம் உன அறையிலே இருந்து வந்தது—கேட்போம் என்று வந்தேன் — மீட்டம்மா உன் வீணையை...''

''அப்பா! அர்த்த ராத்திரியில் என்னப்பா பாட்டு?...நேரம் அதிகமாகிவிட்டது. தூங்கப் போங்கள்...''

''எங்கே...அந்த வெந்நீர்ப் பானையை மூட்டம்மா—எனக்கு வெந்நீர் தேவையாக இருக்கிறது. சாமத்தின் தொழுகைக்குப் போக வேண்டும்''

''அப்பா...''

''தீயை மூட்டு''...கர்ஜித்தான் அவுரங்கசீப். நடுங்கிய கரங்களோடு தீயை மூட்டினாள் அந்தத் தையல். தன் உயிருக்கினியவன் மறைந்திருந்த மண பானைக்குத் தீயை மூட்டினாள். அவளின் நெஞ்சும் தீப்பற்றி எரிந்தது! கண்ணீர் அணை உடைத்த வெள்ளம் போல பெருகியது. பைத்தியம்பிடித்தவள் போல தீயை மூட்டிக்கொண்டேயிருந்தாள். சாந்தமாக உட்கார்ந்து கொண்டே அவைகளைக் கவனித்துக் கொண்டிருந்தான் கொடுமை நிரம்பிய அவுரங்கசீப்.

தீயும் எரிந்தது. தன் நெஞ்சைக் கவர்ந்த காந்தர்வ காதலனை தன் கையாலேயே, அணு அணுவாக சாகடித்தாள். தன்னைத் தொட்டு இன்பம் தந்த வட்டக் கருவிழியாளை காட்டிக்கொடுக்க விரும்பாத அக்குயில்கான் பேசாமலேயே பிணமானான். அவளின் கண் நிறைந்த காதலனும் சாம்பல் குவியலானான். ஜெபுனிசாவும் மயங்கி வீழ்ந்தாள். அவுரங்கசீப்பும் எழுந்து சென்றான்...

மீளா நித்திரையில் ஆழ்ந்துவிட்ட தன் காதலனை நினைத்து, நினைத்து கண்ணீர் வடிப்பாள் ஜெபுனிசா. இன்ப நினைவுகள் சாம்பல் மேடானதை, எண்ணி எண்ணி கண்ணீர் சிந்துவாள். அந்தப்புரமோ, நந்தவனமோ அவளின் சிந்தையை-வெந்த நெஞ்சை குளிரச் செய்யவில்லை. அந்த துக்கத்திலே இருந்து அவள் மீளவே இல்லை. தன புதல்வியின் துயரைப் போக்க எவ்வளவோ முயன்றான் அவுரங்கசீப். ஆனால் அவளின் சோகத்தைத் துடைக்க முடியவில்லை. முடிவில்லா மோனத்தில் ஒருநாள் ஆழ்ந்துவிட்டாள் அந்த அழகு தெய்வம். மகளின் அகால மரணம் அவுரங்கசீப்பை மிகவும் வாட்டியது. இசைதான் தன் செல்வ மகளின் துர்மரணத்திற்குக் காரணம் என நினைத்து அன்றிலிருந்து இசையையே வெறுக்க ஆரம்பித்தான் அவுரங்கசீப்.

''என்ன நாகு! இப்போது புரிந்ததா, ஏன் அவுரங்கசீப் இசையை வெறுத்தான் என்று''

''இதற்கு சரித்திரத்தில் ஆதாரம் உண்டா?'' என்றான் நாகு.

''ஆதாரம் ஒன்றுங் கிடையாது- சரித்திரத்தை எத்தனையோ பேர் திரிக்கிறார்களே; அது போல இதுவும் என்று வைத்துக்கொள்ளேன்!'' என்றேன் நான்.

சரித்திரப் பேராசிரியர் சிரித்துக் கொண்டே எழுந்தார். ஃ


SANKARAN PROGRESSIVE TUTORIALS TIRUCHI

# S.P.T.

SANKARAN
PROGRESSIVE TUTORIALS
★ COLLEGE & HIGH SCHOOL ★
KARUNANIDHI PARK SANKARAM PILLAI ROAD
TEPPAKULAM P.O., TIRUCHIRAPALLI.

**Re-opens: 10th June 1955**

## S. S. L. C., INTER., B. A., etc.,

(All Parts & Groups)

**THE GREATEST LIVING POET**
**BHARATHIDASAN**
Will teach you Tamil!

Mrs. JUDITH LOUIS, B.A.(HONS.) Vice-Principal.
N.J. DEVADAS, M.A., Principal.

# பிறை வானம்



...பிள்ளைகள் பகுதி...

## சிங்கத் தம்பிகளே! தங்கத் தங்கைகளே!

"குப்பன் செய்தது குற்றம் தானா?" என்று சென்ற வாரத்தில் கேட்டிருந்தோமல்லவா, அதற்கு நிறையப் பதில்கள் வந்திருக்கின்றன. 'தவறு செய்தது தந்தை என்றாலும், அல்லது தானே என்றாலும், தண்டனை ஏற்கத்தானே வேண்டும்?' என்று எழுதியிருக்கிறார்கள் பலர். 'அது போகட்டும்; கடற்கரையில் உட்கார்ந்து கதறிக் கொண்டிருந்தானே குப்பன், அப்புறம் அவன் என்ன ஆனான்? — எங்கு போனான்?' — என்று சாரதா என்ற திருவாரூர் தங்கை கடிதம் எழுதியிருக்கிறது. அந்த சோகக் கதையை சொல்ல வேண்டாம் என்றிருந்தேன். ஆவலைக் கெடுப்பானேன்? இதோ கதை, படியுங்கள்:

## ★ "பஞ்சம்" ★

✶

அழுது என்ன பலன்? விலங்கோடு சென்று விட்ட அப்பா, உடனே திரும்பியா வந்துவிடப் போகிறார்? அல்லது கிளிஞ்சல்களையும் ஓடுகளையும் கொண்டுவந்து ஒதுக்கும் கடலலைகள், அப்பாவை அழைத்துவரப் போகின்றனவா? முடியாதல்லவா? அதை உணர்ந்து கொண்டான் குப்பன். மணல் மேட்டை விட்டு எழுந்தான். நடந்தான். கடற்கரையோரமாக-கால்போன போக்கெல்லாம் நடந்து கொண்டேயிருந்தான். எங்கே போகிறான்? அது அவனுக்கே தெரியாது. அப்போதுதான் பவனிக்குப் புறப்பட்ட சந்திரனின் நிலவொளி அவனுக்குப் பாதை காட்டிக் கொண்டிருந்தது.

நடந்தான்; வெகு தூரம் நடந்தான்; பொழுது விடியும் வரை நடந்தான்.

நன்றாக சூரியன் உதயமாகிவிட்டது. நடந்து கொண்டே வந்த குப்பன் எதையோ பார்த்து நின்று விட்டான். அங்கே ஒரு ஓவியர்; அவர் கண் முன்னே ஓவியம் வரையும் 'கான்வாஸ்'; பக்கத்தில் வர்ணக் குழம்புகள். அவர் கடற்கரையை ஓவியமாக எழுதிக் கொண்டிருந்தார். குப்பன் அங்கேயே நின்றுவிட்டான். அதையே—அந்த ஓவியத்தின் அழகையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். அவனைக் கவனிக்கவில்லை அந்த ஓவியர்; காரியத்திலேயே கண்ணாயிருந்தார்.

நேரம் சென்றது. படமும் முடிந்தது. அதன் அழகைக்கண்டு வியந்த குப்பன், "அப்பப்பா!" என்று வாய்விட்டுச் சப்தமிட்டான், தன்னையும் அறியாமல். அச்சப்தத்தைக் கேட்ட ஓவியர் திடுக்கிட்டார்; திரும்பினார்; குப்பனைப்பார்த்தார். "என்னதம்பீ?..." என்று கேட்டார் ஆவலுடன்.

"என்னவா?......உங்கள் முன் இருப்பது படமா? அல்லது நிலைக் கண்ணாடியா?—என்று சந்தேகம் தோன்றுகிறது எனக்கு. அவ்வளவு அற்புதமாக இருக்கிறது படம்!" என்றான் குப்பன். கவலை மறந்து சிரித்தான்.

ஓவியருக்குத் தாங்க முடியாத மகிழ்ச்சி. தம்பியின் ரசிகத்தன்மையைக் கண்டு வியந்தார். கலையை ரசிக்கத் தெரிந்தவர்கள்தான் அதன் அருமையை உணர முடியும்; அதைப் பழக முடியும்; வெற்றியும் காணமுடியும்-என்ற எண்ணம் கொண்டவர் அந்த ஓவியர். அந்த எண்ணம், குப்பனின் மேல் தனி அன்பைப் பாய்ச்சியது. அப்புறமென்ன? 'எங்கே போவது?' என்று வந்த குப்பனை, 'என்னுடன் வருவாயா?' என்று அழைத்தார். அவன் வாயைத் திறக்கவில்லை. அவர் பின்னாலேயே நடந்தான்.

✶

ஒரு சிறிய அறை—அது முழுதும் எண்ணற்ற ஓவியங்கள்—கண்ணைப் பறிக்கும் புதிய ஓவியங்கள்.



நீலக் கடல்—அதன் கரையோரம் சிப்பிக் குவியல்—சிப்பி ஒன்றை உடைத்துமுத்தைப் பார்க்கிறாள் ஒரு பெண்—முத்து பளபளக்கிறது-அதைக் கண்ட அந்தப் பெண்ணின் பற்களெல்லாம் பளபளக்கின்றன - இப்படி ஒரு ஓவியம்!

கூண்டிலே ஒரு கிளி—அதற்குப் பக்கத்தில் ஒன்றும் அறியாதவைகள் போல மூன்று சிங்காரப் பூனைக் குட்டிகள்—பார்த்தால் சிரிப்பு பொங்கும்—இப்படி ஒரு 'அதிசய'ப் படம்!

வெறி பிடித்து பாய்ந்து வருகிறது ஒரு காளை மாடு- அதன் கொம்பைப் பிடித்து 'துள்ளாதே' என்று அடக்குகிறான் ஒரு வீரன்—இப்படி ஒரு கண்ணைக் கவரும் சித்திரம்!

இவை மட்டுமல்ல; இன்னும் எத்தனை எத்தனையோ! அந்த ஓவியக் காட்டுக்கு மத்தியிலே ஒரு பையன் கையில் வர்ணக் குச்சியுடன் இங்கும் அங்கும் அலைந்து கொண்டிருக்கிறான். யார் அவன்? எங்கேயோ பார்த்ததைப் போலிருக்கிறதே! ஆமாம்; அவன் முன்பே நமக்குத் தெரிந்தவன். ஐந்து ஆண்டுகளுக்கு முன் நாம் சந்தித்த சிறுவன் குப்பனேதான் அவன்!

அன்று குப்பனை அழைத்து வந்தாரே ஓவியர், அவர் குப்பனுக்கு ஓவியம் கற்றுத் தந்தார். அவனும் விரைவில் கற்றுக் கொண்டான். பாவம், தனக்குப் பதிலாக குப்பனைத் தயார் செய்து விட்டு, அந்த ஓவியர் இறந்து போனார். இப்போது குப்பன் பிரபல ஓவியன்!

குப்பன் நில்லாமல் உலவிக் கொண்டிருந்தான். "இன்னும் நல்ல ஓவியம் எழுத முடியாதா?" இப்படி முணுமுணுத்தது. அவன் உதடுகள்.

ஊரிலே ஒரு கலைவிழா—அதிலே ஒரு ஓவியப் போட்டி — ஆயிர ரூபாய் பரிசாம்—முடிவு நேரமோ அன்று மாலை—என்ன செய்வது? குப்பன் அதில் கலந்து கொள்ள விரும்பினான். நிறைய எழுதினான். நன்றாகத்தான் எழுதினான். எனினும் அவனுக்கு ஒரு குறை- இன்னும் நல்ல ஓவியமாக எதை எழுதுவது என்பதற்குத்தான் இப்படி யோசிக்கிறான்—கூட்டுப் புலி போல உலவுகிறான்.

சற்றுநேரம் சென்றது. நடந்துகொண்டிருந்த குப்பன் 'சடக்'கென்று நின்றுவிட்டான். ஓவியம் எழுத யோசனை ஏதேனும் கிடைத்து விட்டது என்று நினைக்கிறீர்களா? இல்லை: ஆனால் அறையின் வாசல் புறத்திலிருந்து எழுந்த 'தொப்பென்ற' சப்தம்தான் அவனைத் திடுக்கிடவைத்தது குப்பன் திரும்பினான். படபடப்புடன் பார்த்தான். மறுகணம் 'ஆ' என்று அலறிவிட்டான் அங்கே...பசிக் கொடுமையால் பரிதாபத்திற்குரிய குருட்டு மனிதர் ஒருவர் விழுந்து கிடந்தார். குப்பன் அவரிடம் ஓடினான். பரட்டைத் தலை—பார்வையில்லா கண்கள்-கந்தல் ஆடை-காடுபோல் தாடி-சுருங்கிப் போன நெற்றி—துரும்பான உடல்—அப்பப்பா! அவரைப் பார்க்கப் பார்க்க பயங்கரம் ஒரு பக்கம்; பரிதாபம் ஒரு பக்கம்! குப்பன் அவரைத் தூக்கி நிறுத்தினான். அவர் உடல் நெருப்பாய் சுட்டது. கடுமையான சுரம்! குப்பன் அவரை மெதுவாகத் தன் அறைக்குள் நடத்திக் கொண்டு சென்றான். கட்டிலில் உட்கார வைத்தான்.

"ஐயா!...ஐயா!...யார் நீங்கள்?" என்று பரிவுடன் அழைத்தான்.

அவர் வாய் மெதுவாக அசைந்தது. "யார்? என்னை யாரென்று கேட்டது யார்...? இந்தத் திருடனின் மீது அனுதாபம் காட்டுவது யார்?...தம்பீ!...நீ நல்லவனப்பா! இந்தக் குருடனால் உன் குரலைத் தானப்பா கேட்க முடிகிறது—" அந்த தாடிக்காரர்-குருடர் அழுதே விட்டார். அப்படியே கட்டிலில் சாய்ந்து விட்டார். குப்பன் தன் சட்டைப் பையைத் தேடினான். மேஜை டிராயரைத் தேடினான். சில்லரை எதுவும் கிடைக்கவில்லை. என்ன செய்வது? சாப்பிட ஏதாவது வாங்கித் தரவும் வழியில்லை. அதற்குள் அந்த தாடிக்காரர் பிதற்ற ஆரம்பித்தார். "...கள்ளத்தோணி...நான் ஒரு திருடன்...நான் ஒரு திருடன் அய்யோ!...ஐந்து வருஷம் தண்டனை!...எனக்கா? சிறையா?...பயமாகயிருக்கிறதே......செக்கிழுக்கிறேன்; சிவந்துவிட்டது கைகள்... கல் உடைக்கிறேன்...ஐயோ; ஐயோ!...கண்களே போய் விட்டனவே!...கல்தெறித்து நான் குருடனானேன்...திருடன்...குருடன்... இனி... இனி....பிணம்; பிணம்..." இப்படியெல்லாம் உளறினார் அம்மனிதர்.

அதையெல்லாம் கேட்டான் குப்பன். அவரைக் கூர்ந்து கவனித்தான். மறுகணம் 'கோ' வென்று அழ ஆரம்பித்து விட்டான். அதே சமயம் அவன் மனதிலே—மின்வெட்டு நேரத்தில் யோசனை ஒன்று தோன்றியது. அவசர அவசரமாகக் கண்களை துடைத்துக் கொண்டான்; அந்த மனிதரிடம் ஓடினான் கட்டிலில் சாய்ந்து கிடந்த அவரை நிமிர்த்தினான்; உட்கார வைத்தான்: மீண்டும் வர்ணத்தைக் குழைத்தான்; குச்சியை எடுத்தான்; அவரை ஓவியமாக்க ஆரம்பித்தான். நேரம் ஓடியது. ஓவியப் போட்டிக்கான முடிவு நேரமும் நெருங்கி விட்டது. முடித்தான் படத்தை. அந்தத் தாடிக்காரர் அப்படியே படத்தில பதிந்து விட்டார். அதன் அடியில் "பஞ்சம்"என்றும் எழுதினான். அதே சமயம் உட்கார்ந்து கொண்டிருந்த மனிதர் 'சடா' ரென்று கட்டிலில் சாய்ந்து விட்டார். குப்பன் அவரிடம் ஓடினான். துணி ஒன்றை எடுத்தான். நன்றாகப் போர்த்தி விட்டான். அப்போதும் அவரது புலம்பல் ஓயவில்லை.

குப்பன் ஓவியத்தை எடுத்துக் கொண்டான். கலை விழா மண்டபத்தை நோக்கி ஓடினான்.

✶

நூற்றுக் கணக்கான ஓவியங்கள்—யாருக்குப் பரிசு என்ற கேள்விக் குறியுடன் ஆயிரக் கணக்கான மக்கள்- இதற்கிடையே துடி துடித்துக் கொண்டு நின்றான் குப்பன்!

கடைசியில் முடிவு தெரிந்தது. 'பஞ்ச'த்திற்கே பரிசு!

★


கையில் ரூபாய் நோட்டுகள்—பின்னால் டாக்டர்—பட படப்பு—துடி துடிப்பு—இந்தக் கோலத்தோடு அறைக்குள் ஓடி வந்தான் குப்பன். டாக்டர் கட்டிலில் கிடந்த தாடிக்காரரிடம் ஓடினார். பரிசோதித்தார். ஆனால்.. ஆனால்... டாக்டர் எதுவும் பேசவில்லை. நகரத் தொடங்கினார்.

"டாக்டர்...! இதோ ஆயிரம் ரூபாய்!...எப்படியாவது அவரைக் காப்பாற்றுங்கள் டாக்டர்..."—பதறினான் குப்பன்.

"போகத் துடிக்கும் உயிரை பிடித்து இழுக்கத்தான் நாங்கள் படித்திருக்கிறோம்; போய் விட்ட உயிரை ஓடிப் பிடிக்க முடியாது. என்ன செய்வது தம்பீ"—என்றார் டாக்டர். வெளியே சென்றார்.

"ஐயோ! அப்பா! அப்பா!" என்று அலறிக் கொண்டே அந்த உடலின் மேல் விழுந்தான் குப்பன். ரூபாய் நோட்டுகள் காற்றில் பட படவென்று பறந்தன.

—சொர்ணம்




[இந்தப் பகுதியை இவ்விதழில்தான் துவங்குகிறோம். ஆகவே, இதுவரை எங்களுக்குக் கிடைத்திருக்கும் புத்தகங்கள் அனைத்திற்கும் விரைவில் மதிப்புரை தருகிறோம்—மதிப்புரைக்கு இரண்டு படிகள் அனுப்ப வேண்டுகிறோம்.]

**மதமும், மூட நம்பிக்கையும்**—இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

*"மதம் எல்லா நாடுகளிலும், எல்லாக் காலங்களிலும் பரப்பப்பட்டது; ஆனால், அது எங்கும், எப்பொழுதும் தோல்வியே அடைந்தது!"*

*இந்தக் கருத்தை அடிப்படையாக வைத்து நாவலர் நெடுஞ்செழியனார் அவர்கள் தேமதுரத் தமிழோசையின் சுவை கிஞ்சிற்றும் குறையா வண்ணம் தீட்டியுள்ள அருமையான நூல். மதமெனும் மாயை அகல அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டிய உயர்ந்த ஏடு.*

—வெளியீடு: திராவிடப்பண்ணை, திருச்சி. விலை ரூ. 1-0-0

**கண்மணி**-தென்னரசு.

*தென்றல் துணையாசிரியர் தோழர் தென்னரசு தீட்டியுள்ள நவீனம் கண்மணி. கதாபாத்திரங்கள், தாங்களே தங்கள் கதையைச் சொல்லுகிற பாணியிலே அமைக்கப்பட்டுள்ளது. புதுமையான கதைப் போக்கு. அழகான தமிழ் நடை.* "கூவக் சற்றுக் கோடுத்த குயிலையே அந்தப் பாவி கோத்தவராதிருந்தானேயானால் இந்த நாடக மன்றம் இப்படியா தூங்கிவிழும்?"—*இதுபோன்ற கருத்தாழங் கொண்ட வாசகங்கள் நூல் முழுதும் காணப்படுகின்றன.*

—வெளியீடு: அருணோதயம், சென்னை-14. விலை ரூ. 1-0-0

**பெஞ்சமின் பிராங்ளின்**--அரு. ராமநாதன்.

*நறுக்குத் தெரிக்கும் வார்த்தைகளால் தனக்கென ஒருநடை அமைத்துக் கொண்டு எழுதும் திறமை பெற்றவர் தோழர் அரு. ராமநாதன். அவர் எழுதியுள்ள பெஞ்சமின் பிராங்ளின் நல்லதோர் வரலாற்றுச் சுவடி. புதைந்து கிடக்கும் சரித்திர நிகழ்ச்சிகளுக்குப் புது மெருகூட்டிவரும் பணிக்கு 'பெஞ்சமின் பிராங்ளின் சிறந்த எடுத்துக் காட்டு.*

—வெளியீடு: பிரேமா பிரசுரம், சென்னை-24 விலை ரூ. 1-4-0

**ரூஸோ**-கோமேதகவேலு.

*சமுதாய ஒப்பந்தம் தந்த ரூஸோவின் வாழ்க்கை நிகழ்ச்சிகள், அருமை பெருமைகள், அனைத்தும் அழகு தமிழில் வடித்துக் கொடுக்கப்படுகிறது, தோழர் கோமேதகவேலு அவர்களால்! நல்ல முயற்சி-நல்ல வெற்றி!*

—வெளியீடு: பிரேமா பிரசுரம், சென்னை-24. விலை ரூ. 1-4-0

**நெருஞ்சிப்பழம்**--புலவர் குழந்தை

*இராவண காவியம் இயற்றி ஏற்றம் பெற்ற புலவர் குழந்தை அவர்கள் தீட்டிய நெருஞ்சிப்பழம்-நெஞ்சினிக்கும் பழமாக இருக்கிறது. மிக உயர்ந்த கவிதை நடை—கவின் பெருகும் நடை!*

"நேரிழையாள் கூந்தல்போல் வேறொருத்தி
கூந்தலுள தோவெனத்தன்
கூந்தலை விட்டே தேடுங்கூந்தலாள்"

*தன் கூந்தலைப் போல இன்னொருத்திக்கு உண்டோ என அறிய, தன் கூந்தலை விட்டே தேடக் கூடிய அளவு-அவ்வளவு நீண்ட கூந்தல் படைத்தவளாம்—ஆகா—எவ்வளவு அழகான கற்பனை!*

கிடைக்குமிடம்: சிவலிங்க நூற்பதிப்பு கழகம், ஈரோடு. விலைரூ. 0-12-0

**பாரதிதாசன் கதைகள்**—பாரதிதாசன்.

*"சைவன், சுயமரியாதைக்காரனான பிறகு, அவனை நிறுத்துப் பார்த்ததில், நிறையில் காற்பலம் குறைவு ஏற்பட்டது, விபூதியிடுவது நீங்கியதால்!"*

*"என் வீட்டில் ஒரு பூனைக்கு கழுத்தில் சிலுவை கட்டினேன். மற்றொரு பூனைக்கு நாமம் இட்டேன். உடனே, பூனைகள் பூனைகளாகி விட்டன"*

*இதுபோன்ற கிண்டல் நிறைந்த உண்மைகளைப் படிக்க வேண்டுமா?—'பாரதிதாசன் கதைகள்' என்ற நூலை வாங்கிப் படியுங்கள். கவிஞர் எழுத்துவன்மைக்கு விமர்சனமும் தேவையா?—*

வெளியீடு; ஞாயிறு நூற் பதிப்பகம். விலை ரூ. 1-4-0
கிடைக்குமிடம்:- முரசொலி பதிப்பகம், 131. பிராட்வே, சென்னை-1

## கொள்கை வளருது கோபுரம் போலே!

### பொதுக் கூட்டங்கள்

**வையப்பட்டி**

*11-6-55 சனி மாலை தோழர் சையது இப்ருஹிம் அவர்கள் தலைமையில், தோழியர் சத்தியவாணிமுத்து, தோழர்கள் இளமுருகு பொற்செல்வி, ந. சண்முகம், ரா. ந. ராசன் ஆகியோர் பேசுவார்கள்.*

**குமாரபாளையம்**

*12-6-55 ஞாயிறு மாலை 6 மணிக்கு, சந்தைப்பேட்டை மைதானத்தில், தோழர் சி. பி. சிற்றரசு, தோழியர் அருள்மொழி ஆகியோர் 'இன்றைய நிலை' எனும் பொருள் பற்றிப் பேசுவார்கள்.*

**மேட்டூர் அணை**

*13-6-55 திங்கள் மாலை 6-30 மணிக்கு தோழர் ஆ. பாலு அவர்கள் தலைமையில், தோழர் க. ரு. சிவசாமி, தோழியர் அருண்மொழி ஆகியோர் பேசுவார்கள்.*

**பூந்தமல்லி (சென்னை)**

*12-6-55 ஞாயிறு காலை 10-மணிக்கு, திருச்சி மாநில மாநாட்டு நிதிக்காக, பூந்தமல்லி விக்னேசுவரா தியேட்டரில், தோழர் கே. டி. எஸ். மணி தலைமையில், அறிஞர் அண்ணா அவர்கள் 'உலகைத் திருத்திய உத்தமர்கள்' எனும் தலைப்பில் பேசுவார்கள் கட்டணம் ரூ. 1, அணா 8, 4.*

**சொற் பயிற்சி**

*11—6—55 மாலை 6 மணிக்கு, சென்னை 46-வது வட்ட தி. மு. கழக இல்லத்தில், தோழர் அ. செல்வராசன் தலைமையில் 'நாடு தந்த நல்லவர்கள்' என்னும் பொருள்பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.*

**மகிழ்கிறோம்**

நமது ஆசிரியர் அவர்களின் கார் ஓட்டுபவராகப் பணி புரிந்துவரும் தோழர் அ. ரங்கன் அவர்கள், சென்ற 2—6—55 அன்று தோழியர் கமலம் அம்மையை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொண்டார். திருமண விழா கோவை சிங்காநல்லூரில் சிறப்புற நடைபெற்றது—மகிழ்கிறோம்.

## கல்லும் பேசுமோ, காண்!

**ஆஸ்திகன் :** மரக்கட்டை தச்சரின் உழைப்பால் மேஜையாக மாறுகிறது; யாரும் மேஜையைப் பார்த்து மரக்கட்டை என்று சொல்வதில்லை; மேஜை என்று தான் சொல்லுகிறார்கள். அதுபோல கல்லை கடவுளாக மாற்றுகிறான் சிற்பி-அந்தக் கடவுளைப் பார்த்து கல் என்று கூறுவது பைத்தியக்காரத்தனமில்லையா?

**சுயமரியாதைக்காரன் :** அய்யா அறிவு சூன்யம்! இதைக் கேள். மரக்கட்டை மேஜையாக மாறுகிறது பஞ்சு ஆடையாக மாறுகிறது. உண்மைதான்-அதுபோல கல்லும் சிலையாக மாறுகிறது என்று சொல்லும். கடவுளாக மாறுகிறது என்று சொன்னால் உன்னைப் போலப் பைத்தியக்காரன் யாருமில்லை.

**ஆஸ் :** சரி! கடவுள் சிலையென்று சொல்வது! அதை விட்டு 'கல்' என்று கூறலாமா?


**சு. ம :** வேட்டியை நெருப்பிலே போட்டாலும் எரியாது என்று ஒருவன் கூறினால், "அட முட்டாளே! ஏன் எரியாது? அது பஞ்சு தானே; நிச்சயம் எரியும்" என்றுதான் கூறுகிறோம்.

மேசையை நம் இஷ்டப்படி எப்படி வேண்டுமானாலும் வளைக்கலாம் என்று ஒருவன் சொன்னால், "அட மண்டுவே! அது மரந்தானே-எப்படி உன் இஷ்டப்படி வளையும்?" என்று கேட்கிறோம். அதுபோலத்தான் கடவுள் சிலை, 'வேண்டிய வரம் தரும்; கண் திறந்து பார்க்கும், வாய் திறந்து பேசும்' என்று யாராவது சின்னதுகள் கூறினால்; "அய்யோ சிற்றறிவே! அது கல் தானேயப்பா-எப்படிப் பேசும்?" என்று கேட்கத் தோன்றுகிறது இது பைத்தியக்காரத்தனமா?

அதிருக்கட்டும் ஆஸ்திகரே! இன்னொரு கேள்வி—மரத்தால் செய்த மேசையை-பஞ்சால் செய்த வேட்டியை-இரும்பால் செய்த ஒலிபெருக்கியை யாரும் வணங்குவதில்லை. கல்லால் செய்த சிலையை மட்டும் ஏனய்யா வணங்க வேண்டும்?

**ஆஸ் :** அது... அது...... அது.........

**சு. ம :** நில்லுமய்யா-எங்கே ஓடுகிறீர்?




# 'சினிமா ஒழிக'-(2)

சமீப காலமாக சினிமாத் துறையில் ஒரு புதிய மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. இதை மாற்றம் என்று சொல்வதைவிட ஏமாற்றம் என்று சொல்வதே மிகப் பொருத்தமாகும்.

அறிவியக்கத் தோழர்கள் பலர் திரைப் படங்களின் எழுத்தாளர்களாகவும், நடிகர்களாகவும் இருப்பதைக் கண்டு பொறாமை கொண்ட சிலர், 'சினிமா ஒழிக' கூச்சலைக் கிளப்பியதோடு நின்று விட்டனர்.

இன்னும் சிலர், அதே திரையுலகில் புகுந்து கொண்டு, அறிவியக்கத்தாரை அழித்து விடலாம் என்று கனவு காண்கிருர்கள்-அவர்களில் ஒரு சிலர்—பாவம்; பரிதாபத்திற்குரியவர்கள் கையிலே பேனைவைத் தொட்டதுமே அறிவியக்கத் தோழர்கள் மீது வசை புராணம் பாடத் துவங்கி விடுகிருர்கள். அறிவியக்கத்தின் மீது தங்களுக்குள்ள ஆத்திரத்தை தணித்துக் கொள்ள இதுவே தக்கவழியென்றும் தேர்ந்தெடுத்திருக்கிருர்கள்.

அந்த வழி தோல்வி மேல் தோல்வியை அளிப்பதாயிருப்பினும் அதைப் பற்றி அவர்கள் கவலைப்படவில்லை.

ஏதோ அந்த நேரத்துக்கு நாலு காசு கிடைத்தால் போதும என்கிற மனோபாவம் வளர்ந்திருக்கிறது; என் செய்வது!

வேலைக்காரி படத்திலே, காளிதேவியை நம்பி, அவள் காலடியிலே கிடந்த ஆனந்தன், காளியினுல் எந்தப்பயனுமில்லை என்று கண்ட பிறகு, அவளைத் தூற்றுகிருன். "ஆயிரம் கண்ணுடையவள் என்கிருர்களே; ஒரு கண்ணுல் என்னைப் பார்க்கக் கூடாதா?" என்று அலறுகிருன். கடைசியில் காளியை அலட்சியப் படுத்துகிருன். அறிவு பெறுகிருன்.

இதைப் பார்க்கும் ஆஸ்திக வாதிக்கு ஆத்திரம் வருகிறது—அர்த்தமில்லாத ஆத்திரம்! அதே ஆஸ்திகவாதியை, காளி எத்தனையோ முறை கைவிட்டிருப்பாள். அதுபற்றி நினைக்கவும் மாட்டார் அவர். அண்ணுதுரை காளியைக் கேலி செய்வதா என்று மிரண்டெழுகிருர். அப்படி எழுந்தவர் என்ன செய்ய வேண்டும், நாகரீகமுள்ளவராயிருந்தால்?

பொதுமக்களிடம் காளியின் மகாத்மியத்திற்கு சான்றுகள் தரவேண்டும். அவள் சக்தி வாய்ந்தவள் என்பதை நிரூபிக்க வேண்டும். அதை விட்டு விட்டு, அண்ணு அவர்களை வசைபாடி ஒழித்துவிட முனைவது ஏன்? தன்மான இயக்கத்தின் கொள்கைகளை எதிர்க்கத் துணிவில்லாத தற்குறித் தன்மை பெற்றோர், தனிப்பட்ட முறையில் தாக்குதல்களைகளை ஏவுவது மிக மிக வெட்ககரமான காரியம்.

உனக்குத் துணிவிருந்தால் நீயும் காட்டு; "ஆனந்தன் அழுகிருன் காளியிடம்; காளி பிரசன்னமாகிருள்; வேண்டிய வரம் தருகிருள்" என்பதுபோல கதை எழுதி படங்காட்டு! அதை விடுத்து ஏசற் கணைகளை ஏன் பொறுக்குகிருய்? காளி தரிசனத்தை படத்திலே நீ காட்டினுல், 'காளி, சினிமாவிலேதான் வருவாள்; கஷ்டப்படும் மனிதனின் வாழ்க்கையிலே வரமாட்டாள்' என்று மக்கள் பேசிக் கொண்டு போவார்கள் என்பதும் உனக்குத் தெரியும்—ஆனுலும் எரிச்சல் உனக்கு அடங்கியபாடில்லை, ஏதேதோ கிறுக்கித் தள்ளுகிருய்!

தங்கையைக் காமுகனுன பூசாரி கற்பழிக்க முயன்ற போது காப்பாற்ற முன் வராத பராசக்தியைப் பார்த்து— "**அது பேசாது—கல்!**" என்கிருன் குணசேகரன்.

உனக்குத் திறமையிருந்தால், நீ சொல்வதிலே உண்மையிருக்கிறது என்ற உறுதிப்பாடு இருந்தால், "**அது பேசும்**" என்று நிரூபித்துக் காட்டு! அப்படி நிரூபித்துக் காட்டுகிற ஒரு படத்தை எழுதி வெளியிடு! அதற்குத் திறமையும், கருத்திலே வலிவும் அற்ற நீ, அந்த எழுத்தாளரை திட்டிப் பிழைக்கத் திட்டம் தீட்டுகிருய்.

அறிவியக்கத்தார் திரையுலகில் பிரவேசிப்பதற்கு முன்பு எத்தனையோ புராணப் படங்கள், எத்தனையோ தேசீயப் படங்கள், எத்தனையோ கதர் பிரச்சாரப் படங்கள் வெளி வந்தனவே; அவைகளின் கொள்கை பிடிக்காத அறிவியக்கத் தோழர்கள்—அந்தக் கொள்கைகளை வேண்டுமாஞல் மறுத்துரைத்திருப்பார்களே தவிர, அந்தப் படங்களை வெளியிட்டவர்களையோ, அல்லது அதன் எழுத்தாளர்களையோ, சாக்கடை மொழியிலே தனிப்பட்ட முறையிலே அர்ச்சித்தார்கள் என்று யாராவது சொல்ல முடியுமா?

வீண் எரிச்சலும், பிழைப்பதற்குப் புது வழி காண வேண்டிய நிலையும் ஏற்பட்டவர்களும் தான் இப்போது எகிரிக் குதிக்கிருர்கள். இன்னும் சொல்லப்போனுல், இவர்களும் கூட—"சினிமா ஒழிக" என்று சொல்லாமல்—அதே நேரத்தில் தங்களையறியாமல் அந்த நல்ல கலையின் ஒழிப்புக்கு ஒத்துழைக்கும் ஒதியமிலார்களாக விளங்கி வருகிருர்கள். அவர்களைப் பொறுத்தவரை அவர்கள் செய்திருப்பதாக நினைக்கும் மாற்றம், வெறும் ஏமாற்றமே தான் என்பதை சமீப கால விளைவுகள் அவர்களுக்கு விளக்கியிருக்கின்றன.

✶



மெர்க்குரி பிலிம்சாரின் பெயரிடப்படாத இரண்டாவது தயாரிப்பில் ஸ்ரீராமும், கோபாலும்.

## வெள்ளி வீதி

● ரங்கோன் ராதாவின் படப்பிடிப்பு இந்த மாதம் 10ம் தேதி பரணி ஸ்டூடியோவில் ஆரம்பமாக இருக்கிறது. சிவாஜி கணேசன், பானுமதி, என். எஸ். கே., மதுரம், எம். என். ராஜம் ஆகியோர் சம்மந்தப்பட்ட காட்சிகள் படமாகப் போகின்றன. இதன் ஆர்ட் டைரக்ஷன் பொறுப்பை ஓவியர் கே. மாதவன் ஏற்றுக் கொண்டிருக்கிருர்.

✶

● மாடர்ன் தியேட்டர்சாரின் மகேஸ்வரி படம், முன்பு அறிவிப்பு வந்ததைப்போல ராஜ்னுத்தால் டைரக்ட் செய்யப்படவில்லை. இப்போது டி. ஆர். ரகுநாத் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிருராம். விரைவில் திரைக்குக் கொண்டு வருவதற்கானவேலைகள் அனைத்தும் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

✶

● தென்னுட்டுப் பட முதலாளிகள் வடநாட்டிலே வெற்றி முழக்குகிருர்களாம்; ஜெய பேரிகை கொட்டுகிருர்களாம்!-இப்படியெல்லாம் பேசப்படுகின்றன!

இதோ பாருங்கள், தென்னுட்டுப் பட முதலாளிகள் அந்த ஜெய பேரிகைக்காகத் தந்திருக்கும் விலைப் பட்டியலை!

ஜெமினி 'இன்சானியத்' என்னும் இந்திப் படத்தில் நடிப்பதற்காக திலீப் குமார் 1,50,000 ரூபாய்கள் பெறுகிருர். தேவ் ஆனந்த் என்பவருக்கு 75,000. பினுராய் என்னும் நடிகைக்கு 45,000. ரமானந்த் சாகர் என்னும் எழுத்தாளருக்கு 50,000. சங்கீத டைரக்டராக ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கும் ராமச்சந்திராவுக்கு ரூ. 1,00,000

—இப்படி எண்களுக்குப் பின்னுல் பெருகிக்கொண்டிருக்கும் 'சைபர்'களை அஸ்திவாரமாக வைத்துத்தான் தென்னுட்டுப் படாதிபதிகள் வெற்றி மாளிகை கட்டுகிருர்கள். இதற்கா 'தென்னுட்டுப் பட முதலாளிகளின் வெற்றி' என்று பெயர்? நீங்களே சொல்லுங்கள்!

✶

**கைவல்யம் படிப்பக நிதிக்காக**
பல்லாவரம் பஸ் நிலையத் திடலில்
**அறிஞர் அண்ணு**
தலைமையில்
**மக்கள் தீர்ப்பு?**
[என்னும் நாடகம்]
11-6-55 சனி மாலை
6-30 மணிக்கு நடைபெறும்
கட்டணம் :
**ரூ. 2, 1, அணு 8.**
அமைப்பு :
தி. மு. க. பல்லாவரம்.

# 'எழுத்தாணி'

இந்த வாரம் பரிசு பெறும் தோழர் :
(●) முகிலன்;
வடுகப்பட்டி,
சோழவந்தான் வழி,
[மதுரை மாவட்டம்]

ஓ. கே. முத்துசாமி;
வகுரம்பட்டி, நாமக்கல்.

(?) உலக நாடுகளை மிஞ்சும் விதத்தில் நம் திராவிடத்தில் இருப்பவை என்ன?

தற்போதைக்கு கடவுள்கள்தான்.

இ. கணபதி; கல்லிடைக்குரிச்சி.

(?) பயம் என்பது மனிதனுக்கு இயற்கையாகவே ஏற்பட்டதா?

பயத்தின் மூத்த குழந்தைதான் தெய்வம் என்ற மூளிக்குழந்தை!

வி. கே. காளியப்பன்; வடுகப்பாளையம், தாராபுரம்.

(?) நேரு, ஆச்சாரியார் இவர்களிடமுள்ள நல்ல பண்புகள் எவை?

ஒருவருக்கொருவர் மனதுக்குள்ளே எவ்வளவு இருந்தாலும் சண்ட இடத்துக் கரம் குலுக்கி மெய்சேரத் தழுவிக் கொள்ளுகிறவர்கள் இருவரும்.

நா. வீரசேரன்; சென்னை-10

(?) பல் துலக்கும்போது ரத்தம் வருகிறதே; ஏன்?

நான் என்ன; பல் டாக்டரா இதற்குப் பதில் சொல்ல? கண்ணைப் பற்றி வேண்டுமானால் கேளும் — அனுபவத்தைக் கக்குகிறேன்.

(?) எழுதவோ, படிக்கவோ ஆரம்பித்தவுடன் தூக்கம் வந்து விடுகிறது-நான் என்ன செய்யலாம்?

என்ன செய்வது? தூக்கம் வராமல் தொல்லைப் படுகிறவர்களுக்கு வேண்டுமானால் நீர் கண்டுபிடித்த இந்த மருந்தை சிபார்சு செய்யலாம்.

இர. கிருட்டிணன்; தெனியாய, இலங்கை.

(?) பாண்டுங் மகாநாட்டை எதற்கு ஒப்பிடலாம்?

கண்ணாடியில் தெரியும் சந்திரனுக்கு ஒப்பிடலாம்.

(?) நேரு — கொத்தலாவலையின் டில்லி ஒப்பந்தத்தை எதற்கு ஒப்பிடலாம்? ஏன்?

கைக்குட்டைக்கு ஒப்பிடலாம்— கண் துடைக்கப் பயன்படும் காரணத்தால்!

எஸ். எஸ். தேவராசன்; லால்குடி.

(?) சாகாமல் இருக்கும் ஜீவன் எது?

பிறக்காமல் இருப்பதுதான்.

சந்தான ராமசாமி; பெங்களூர் கண்டோன்மென்ட்.

(?) சிவஞான கிராமணியார் திராவிடர் கழகங்களோடு சேர முடியாது என பேசியிருக்கிறாரமே...

குப்பன் வீட்டுக் கோழி வழக்கம் போல் முட்டை யிட்டுக் கொண்டுதானிருக்கிறதாம்!

ம. பழனியாண்டி; பாமத்தி, சேலம்.

(?) தி. க., தி. மு. கழகங்கள் தோன்றாமல் இருந்திருந்தால்?...

யோசித்துப் பாரும்-நீர் பிறக்காமல் இருந்திருந்தால் இந்தக் கேள்விக்கு நான் பதில் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை.

'நீல மின்விளக்கு'; திருவண்ணாமலை.

(?) உலகத்தில் மிகச் சுலபமாகக் கிடைக்கக் கூடியது எது?

உபதேசம்!

(●) முகிலன்; வடுகப்பட்டி, மதுரை

(?) நேருவின் மாஸ்கோ விஜயத்திற்குப் பிறகு இந்திய கம்யூனிஸ்டுகளின் நிலை என்ன?

இந்தக் கேள்வி கம்யூனிஸ்டு வட்டாரத்திலே பெருமூச்சுடன் கலந்தும்-காங்கிரஸ் வட்டாரத்திலே ஆயாசத்தோடு இணைந்தும் கிளம்பியிருப்பது உண்மைதான். நமக்கு என்னமோ நேருவின் ரஷ்ய வெடியும் சீன வெடியைப் போலத்தானிருக்குமென்று தோன்றுகிறது. பொறுத்திருந்து பார்ப்போம்.

சு. மாடசாமி-செண்பகராமன் புதூர்.

(?) லோக்சபா சபாநாயகர் மாவ்லங்கர், தேசிய மொழியான இந்தியை எதிர்த்துக் கிளர்ச்சி நடத்துவது தற்கொலைக் கொப்பாகும் என்கிறாரே-அதுபற்றி தங்கள் கருத்தென்ன?

இந்தியை எதிர்த்து தற்கொலை (தியாகம்) செய்துகொள்ளாதீர்கள். இந்தியைத் திணித்து நாங்களே சொலை (அடிமை) செய்கிறோம் என்பதுதான் அவர் பேச்சுக்குப் பொருள்.

வி. பெருமாள்; தேவக்கோட்டை.

(?) அகோபில மடத்து அறிக்கைப்படி ஆண்டவனுக்கு சமஸ்கிருத பாஷையில் அர்ச்சனை செய்வது சரியா? குன்றக்குடியார் சொல்வதுபடி தமிழில் அர்ச்சனை செய்வது சரியா?

செவிடன் காதில் எந்தச் சங்கை ஊதினால் என்ன? எல்லாம் ஒன்றுதான்.

எம். ஒய். சென்னியப்பன்; மதுரை.

(?) தி. மு. கழகத்திலிருந்து விலகி (விலக்கப்பட்டு) இப்போது தி. மு. கழகத்தை திட்டிக் கொண்டிருக்கிறார்களே; அவர்கள் எப்படிப்பட்டவர்கள்?

'காங்கிரசுக்குள்ளேயே இருந்து கொண்டு, காங்கிரஸ் தலைவர் ஆச்சாரியார் போன்றவர்களைத் தாக்கிக்கொண்டிருக்கும் மாரிசாமிகளைவிடவும், அதுபோல காமராசரைத் தூற்றும் காங்கிரஸ் ஏடுகளை விடவும், அவர்கள் ஒரு படி உயர்வானவர்களே, என்று ஒரு காங்கிரஸ் நண்பர் என்னிடம கூறியதை உமக்குப் பதிலாகத் தர விரும்புகிறேன்.

ராஜன்; லால்குடி.

(?) எதையும் தாங்கும் இதயம் படைத்தவர்கள் எப்படி இருப்பார்கள்?

மன்தருள் மதிப்பு வாய்ந்தோராக!

(?) திருச்சி மாநாட்டுக்கு நேரு வருவாரா?

இந்த மாநாட்டுக்கு வரமாட்டார்; அவர் வந்து திராவிடநாட்டு பிரிவினைப் பத்திரத்தில் கையெழுத்துப் போடவேண்டிய மாநாடும் விரைவில் நடக்கத்தான் போகிறது!

எம். பி. பண்பராசன்; திருவலம்.

(?) எனக்கு மதத்தில் நம்பிக்கை கிடையாது. நான் மதம் மாறு விட்டால் எனக்கு என் காதலி சொந்தமாக மாட்டாள். நான் என்ன செய்யலாம்?

காதலியை மணமேடையிலே கைப்பிடிக்க வேண்டுமென்பதற்காக சிலர் சாம்ராஜ்யங்களையே துறந்திருக்கின்றனர்; உண்மைதான்! இருந்தாலும் ஒரு பெண்ணுக்சாக பகுத்தறிவை அடகு வைத்து மதமென்னும் அபின் பருகுவது முட்டாள்தனம்! முடியுமானால் உம் காதலியையும் ஒரு பகுத்தறிவுவாதியாக மாற்றுங்கள். சீர்திருத்த மேடையிலே மணமாலையுடன் சந்தியுங்கள். சுயமரியாதை இயக்கம் உமக்கு துணைபுரியும்!

சிகாமணி; சேலம்.

(?) நம்பினவன் — நட்டாற்றில் விட்டு ஓடியவன்-திரும்பி வருகிறான்; என்ன செய்வது?

நம்பாதே! ஆனால் நகை முகம் காட்டு. அது அந்தப் பகைவனின் நெஞ்சில் தொகை தொகையாக ஈட்டிகளைப் பாய்ச்சும்.

நான் சென்ற வார 'முரசொலி'யில் 'சுழல் விளக்கு' என்றப் பகுதியைப் பார்த்தேன். தமிழ்ல் சீர்திருத்தம் செய்பவர்களில் இப்படியும் ஒருவர் இருக்கிறாரே என்று நினைக்கும்போது என் தலை சுழன்று விடும்போல் ஆகி விட்டது. எனவே இனிமேல் சுழல் விளக்கில் இதுபோன்ற செய்திகளை அடிக்கடி தெரியப் படுத்துமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

—மு. காளிதாசன்,
பெங்களூர்.

'நமக்கு நாமே' என்ற தத்துவம் வட அயர்லாந்து என அழைக்கப்படும் அல்ஸ்டர் மாகாணத்தில் ஷின்-பேன் இயக்கத்தவருக்கு இருந்த காரணத்தினால் தான், மயில் தோகையின் அழகு நிகர்த்த மங்கையின் மடியிலே இல்லாமல், கோட்டானின் கூக்குரல் காதுகளைத் துளைக்கும் காராகிரகத்தில் இருக்கின்ற நேரத்தில் வெற்றிமாலை சூடினார்கள். "உரிமை முரசு தட்டிக் கொண்டிருக்கும் நாங்கள் உறங்கிவிடவில்லை" என்று வட நாட்டு ஏகாதிபத்தியத்துக்கு தெரிவிக்கும் வகையில் நாமும் அவர்களுடைய தத்துவத்தை நமது இயக்கத்தின் 'கொக்கரிக்கும் குரலா'க ஏற்று தேர்தலில் நின்று வெற்றி பெறுவோம்!

— திராவிட 'வீர' சீனிவாசன்,
திருவல்லிககேணி.

"சிட்டாட்டம்" கதை காதலால் கண்மூடித்தனமாக நடக்கும் கயவர்களுக்குப் பாடம் புகட்டும் கருத்தோவியம். பணத்தில் புரண்டுகொண்டு, பாதக வார்த்தைகள் வீசும் பித்தர்களுக்கு ஓர் அருமையான படப்பிடிப்பு.

—அ. வீரப்பன்,
கொமாரபாளையம்.

"கொக்கரிக்கும் குரல்" கட்டுரை எங்களை மிகவும் கவர்ந்துவிட்டது. அது கட்டுரையல்ல — அடிமைச் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருக்கும் திராவிட இனத்து இதயத்தின் அடித்தளத்திலிருந்து எழும்பும் உணர்ச்சியுள்ள உரிமைக் குரல். ஷின்-பேன் இயக்கம்போல் நமதியக்கமும் இயங்குதல் வேண்டுமென்பதே எங்கள் இதய கீதம். இதுபோல பல எழுதுக.

—ஆர். எஸ். பிரகாசம்,
எஸ். கமலாவதி,
மதியரசு, —பரமக்குடி.

"திரை விலகுது, தீபம் தெரியுது" என்ற தலைப்பின் கீழுள்ள செய்தி, 'திராவிடநாடு பிரியாது' எனக் கொக்கரிக்கும் வான் கோழிகளுக்கும், 'அவாள்' கூட்டத்திற்கும் ஓர் சவுக்கடி. இரட்டிப்பு வட்டி வாங்கும் வடநாட்டின் ஏஜெண்ட்தான் ஆச்சாரியார் என்பதில் அணுவளவும் சந்தேகம் இல்லை. ஷை செய்தியைத் திரும்பத் திரும்ப படிக்க வேண்டும் என்ற எண்ணம் எழும்பிக்கொண்டே உளது.

—நாரணன்; பழம் நீ,
கிழை-கோவல்.